# தமிழ்ப் பேரகராதி

எடுத்துக்காட்டுப் படி

தமிழ்ப் பேரகராதித் துறை
**தமிழ்ப் பல்கலைக் கழகம்**
தஞ்சாவூர் - 61 3001
தமிழ்நாடு
1984

# தமிழ்ப் பேரகராதி

## எடுத்துக்காட்டுப் படி


தமிழ்ப் பேரகராதித் துறை

தமிழ்ப் பல்கலைக் கழகம்

தஞ்சாவூர் - 613 001

தமிழ்நாடு

1984

# நெறிப்படுத்துங் குழு

| | | |
|---|---|---|
| காப்பாளர் | : | **டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்**<br>முதலமைச்சர்,<br>தமிழ்நாடு அரசு. |
| தலைவர் | : | மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்,<br>இணை வேந்தர்,<br>கல்வி அமைச்சர்,<br>தமிழ்நாடு. |
| துணைத் தலைவர் | : | மாண்புமிகு திரு. தொண்டமான்,<br>ஊரகம் மற்றும் தொழில் துறை அமைச்சர்<br>சிறிலங்கா. |
| ,, | : | மலேசியாப் பேராளர் |
| ,, | : | சிங்கப்பூர் பேராளர் |
| ,, | : | மோரிசியஸ் பேராளர் |
| ,, | : | தலைமைச் செயலாளர்,<br>பாண்டிச்சேரி. |
| ,, | : | டாக்டர் வ. அய். சுப்பிரமணியம்,<br>துணை வேந்தர் (கூட்டுநர்),<br>தமிழ்ப் பல்கலைக் கழகம்,<br>தஞ்சாவூர். |
| உறுப்பினர் | : | திரு. தி. டி. சுந்தரராசு இ.ஆ.ப.,<br>ஆணையர் மற்றும் கல்வி, அறிவியல்,<br>தொழில் நுட்பத்துறைச் செயலர்,<br>தமிழ்நாடு. |
| ,, | | திரு. சி. இராமச்சந்திரன்,<br>ஆணையர் மற்றும் நிதித்துறைச் செயலர்,<br>தமிழ்நாடு. |
| சிறப்பு அழைப்பினர் | : | சென்னைவாழ் தமிழ்ப் பல்கலைக் கழக<br>ஆளுநர் குழு உறுப்பினர்கள். |
| ,, | : | வளர்தமிழ்ப் புலத்தலைவர்,<br>தமிழ்ப் பல்கலைக்கழகம்,<br>தஞ்சாவூர். |
| ,, | : | முதன்மைப் பதிப்பாசிரியர்கள்,<br>பேரகராதி,<br>அறிவியல், கலைக்களஞ்சியம்,<br>வாழ்வியல், கலைக்களஞ்சியம். |

# வட்டார ஆலோசனைக் குழு

தலைவர் : டாக்டர். வ. அய். சுப்பிரமணியம்,
துணை வேந்தர்,
தமிழ்ப் பல்கலைக்கழகம்,
தஞ்சாவூர்.

உறுப்பினர்கள் : திரு. தி. டி. சுந்தரராசு, இ.ஆ.ப.,
ஆணையர் மற்றும் கல்வி, அறிவியல்,
தொழில் நுட்பத்துறைச் செயலர்,
சென்னை.

: திரு. சி. இராமச்சந்திரன்,
ஆணையர் மற்றும் நிதிச் செயலர்,
சென்னை.

: பேராசிரியர் அ. மு. பரமசிவானந்தம்,
சென்னை.

: திரு. சு. செல்லப்பன்,
தமிழ் வளர்ச்சி இயக்குநர்,
சென்னை.

: திரு. புலமைப்பித்தன்,
சென்னை.

: டாக்டர் ச. வே. சுப்பிரமணியம்,
இயக்குநர்,
உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்,
சென்னை.

: பேராசிரியர் ம. சண்முக சுப்பிரமணியம்,
வளர் தமிழ்ப் புலத்தலைவர்,
தமிழ்ப் பல்கலைக்கழகம்,
தஞ்சாவூர்.

: திரு. மு. அருணாசலம்,
முதன்மைப் பதிப்பாசிரியர்,
தமிழ்ப் பேரகராதி,
தஞ்சாவூர்.

: திரு. பி. எல். சாமி, இ.ஆ.ப. (ஓய்வு),
முதன்மைப் பதிப்பாசிரியர் (அறிவியல்),
தமிழ்ப் பல்கலைக்கழகக் களஞ்சிய மையம்,
சென்னை.

: டாக்டர் நா. பாலுசாமி,
முதன்மைப் பதிப்பாசிரியர் (வாழ்வியல்),
தமிழ்ப் பல்கலைக்கழகக் களஞ்சிய மையம்,
சென்னை.

# தமிழ்ப் பேரகராதி

## பதிப்புக் குழு

**தலைமைப் பதிப்பாசிரியர் :**

திரு மு. அருணாசலம்

**பதிப்பாசிரியர் :**

1. திரு எஸ். கே. இராமராசன் — தத்துவம் - சமயம்
2. டாக்டர் பா. ரா. சுப்பிரமணியன் — இலக்கணம் - மொழியியல்
3. டாக்டர் கொ. இலட்சுமணசாமி — இலக்கியம்

**சொல் திரட்டுநர் :**

1. திரு தி. அரங்கநாதன் — தத்துவம்
2. திரு ம. மதியழகன் — இலக்கியம்
3. டாக்டர் ச. சுபாஷ்சந்திரபோசு — இலக்கணம் - மொழியியல்
4. திரு இரா. அம்பை சங்கரன் — தலைமைப் பதிப்பாசிரியர் பகுதி

# முன்னுரை

இவ்வெடுத்துக்காட்டுப் படி மூன்று பகுதிகளைக் கொண்டுள்ளது.

## முதற் பகுதி

இப்பகுதியில் சென்னைப் பல்கலைக் கழகப் பேரகராதியோடு ஒப்பு நோக்குதற்கு உதவியாக மூன்று சொற்கள் எடுத்துத் தரப்பட்டுள்ளன. தொடக்கத்தில், அப்பேரகராதியின் அம்மூன்று சொற்களையும் அவற்றின் விளக்கத்தையும் அங்குள்ளவாறே எடுத்துத் தந்து, பின்னர்த் தமிழ்ப் பல்கலைக் கழகப் பேரகராதியில் அவற்றுக்கு என்ன விளக்கம் அமையக் கூடுமோ அவ் விளக்கம் தரப்பட்டுள்ளது.

## இரண்டாம் பகுதி

இப்பகுதியில், சென்னைப் பேரகராதியில் இடம்பெற்றுள்ள சில சொற்களும், இடம்பெறாத சில புதிய சொற்களும் எடுத்துக்காட்டாகத் தரப்பட்டுள்ளன. தமிழ்ப் பல்கலைக் கழகப் பேரகராதியில் அவை எத்தகைய விளக்கங்களுடனும் அமைப்புடனும் இடம்பெறும் என்பதனை இப்பகுதி காட்டும்.

## மூன்றாம் பகுதி

இப்பகுதியில் சென்னைப் பல்கலைக் கழகப் பேரகராதியில் 605ஆம் பக்கம், 644ஆம் பக்கம் என்ற இரண்டு பக்கங்களில் காணப்படும் அனைத்துச் சொற்களும் விளக்கிக் காட்டப்பட்டுள்ளன. சென்னைப் பேரகராதியின் பக்கங்களை ஒப்புநோக்கி ஆய்வதற்கு இவை உதவியாய் இருக்கும்.

## சில குறிப்புக்கள்

*1.* தமிழ் இலக்கியம் பயிலும் மாணாக்கருக்குத் தமிழ்ச் சொற்றொகையின் பெருமையையும், கால முறைப்படி மேற்கோள்கள் தந்து ஒவ்வொரு சொல்லுக்கும் காலப்போக்கில் நேர்ந்துள்ள பொருள் வேறுபாட்டின் தொடர்ச்சியையும் காட்டுவதே இப்பேரகராதியின் முதல் நோக்கம். தமிழ்ப் பல்கலைக் கழக அகராதியில் ஆங்கில விளக்கம் இடம் பெறவில்லை. சொற்பிறப்பு நெறியும் காட்டப்பெறவில்லை. இப்போது தரப்பட்டுள்ள எடுத்துக்காட்டுப் படியில் காணும் சொற்களுக்குரிய எல்லா விளக்கங்களும் முழுமையாக இடம்பெற்று

விட்டன என்று கூறுவதற்கில்லை. பெரும்பான்மையான தமிழ் நூல்களுக்குச் சொல்லடைவுகள் இன்னும் கிடைக்கவில்லை. இப்போது கிடைத்துள்ள சொல்லடைவுகளை மட்டுமே வைத்துக்கொண்டு மேற்கண்ட விளக்கங்கள் தரப்பட்டுள்ளன. எல்லா நூல்களுக்கும் முழுமையான சொல்லடைவுகளும், கல்வெட்டுக்களுக்கான சொல்லடைவுகளும் கிடைத்தபின், இப்போது தரப்பட்டுள்ள பொருள் விளக்கங்கள் பெருகவும், வேறுபடவும் அல்லது மாறுபடவும் வாய்ப்புண்டு. மேற்கோள்கள் இயன்றவரை பொருளையொட்டிக் கால வரிசைப்படித் தரப்பட்டுள்ளன.

2. தமிழ்ப் பல்கலைக் கழகப் பேரகராதி, சென்னைப் பல்கலைக் கழகப் பேரகராதியின் விளக்கம், மேற்கோள் முதலியவற்றை ஏற்று, வேண்டிய திருத்தம், மேற்கோள் பெருக்கம் ஆகியவற்றை அமைத்துக் கொண்டுள்ளது என் பதைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். வினைகளைக் அடுத்துத் தரப் பட்டுள்ள எண்கள் சென்னைப் பேரகராதி தந்துள்ள வினை வகைகளின் எண் களைக் குறிக்கும். உரிய காலத்தில் இவை மீண்டும் ஆராயப்பட்டுத் தேவைப்படின் திருத்தி அமைக்கப்படும்.

3. கால வேறுபாட்டினால் அமைந்துள்ள பொருள் தொடர்ச்சியைக் காட்டுவதற்கும், கருத்தை மேலும் தெளிவாக்குவதற்கும் சில இடங்களில் ஒரு பொருளுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட மேற்கோள்கள் தரப்பட்டுள்ளன.

விளக்கங்களில் தந்துள்ள நூல்களின் சுருக்கக் குறியீடுகளும் பிற சுருக்கக் குறியீடுகளும் இறுதியில் தனியாகத் தரப்பட்டுள்ளன.

# தமிழ்ப் பேரகராதி

## எடுத்துக்காட்டுப் படி

### பகுதி 1, 2

### தனிச் சொற்கள்

### பகுதி 1

#### சென்னைப் பல்கலைக் கழகப் பேரகராதி

**அசும்பு[1]-தல்** *acumpu-*, 5 *V. intr.* 1. *To flow;* ஒழுகுதல். அசும்பு பொன்வரை (சீவக. 533). 2. *To spread, be diffused;* பரவுதல். அவிரொளியசும்ப (காஞ்சிப்பு. பன்னிரு. 164).

#### தமிழ்ப் பல்கலைக் கழகப் பேரகராதி

**அசும்பு[1]-தல்** 5. வி. அ. 1. ஒழுகுதல், வார்தல். அசும்பு அருவி அரு விடர்ப் பரந்த (பரிபா. 21, 52), அசும்பு தேன் அலங்கல் (சீவக. 621); 2. நீர்போல் ஒழுகி நிற்றல். அசும்பு பொன்வரை ஆய்மணிப் பூண்கள் (சீவக. 533);

ஆ. 3. வழுக்குதல். தேன் ஒழுகி நின்று அசும்பும் உயர் சந்தனத் தொழுதிக் குன்றம் துளும்ப (சீவக. 3063);

இ. 4. ஒளி வீசுதல், பரவுதல், மிளிர்தல். பசும்பொன் அசும்பிய தொந்தியொடும் சிறு பண்டி சரிந்தாட (குமர. பிர. முத்துக். 5), அவிர் ஒளி அசும்ப (காஞ்சிப்பு. பன்னிரு. 164).

#### சென்னை

**அசும்பு[2]** *acumpu, n.* <அசும்பு. 1. *Spring;* ஊற்று. (பிங்.) 2. *Well;* கிணறு. (திவா.) 3. *Ooze, exudation;* நீர்ப்பொசிவு. அசும்பிவர் சாரல் (சீவக. 522) 4. *Soft mud;* சேறு. (பிங்.) 5. *Miry place, mudhole;* பொல்லாநிலம். (திவா.) 6. *Minute drop of water;* சிறு திவலை. (திருக்கோ. 149) 7. *Connection, adherence;* பற்று. அசும்பறத் துடைத்தும் (ஞானா. 41) 8. *Blemish, fault;* குற்றம். அசும்பற வகன்ற ஞானத் துறவனே (சேதுபு. சங்கர. 92).

(அனுபந்தம்)

**அசும்பு** *acumpu, n.* <அசும்பு. (பொதி. நி.) 1. *Scattering, throwing;* வீசுகை. 2. *Lustre;* காந்தி. 3. *Want, poverty;* வறுமை.

#### தஞ்சை

**அசும்பு[2]** பெ. அ. 1. சேற்று நிலம். அசும்பின் அம் தூம்பு வள்ளை அழல் கொடி (அகநா. 376, 13-14); 2. சேறு. அசும்பு அமல் தாமரை (பெருங். 3, 5, 11); 3. மதுச் சேறு. நறவுப் பிழிந்திட்ட கோதுடைச் சிதறல் வார் அசும்பு ஒழுகு முன்றில் (புறநா. 114, 5); 4. நீர்ப்பொசிவு. அசும்பு இவர் சாரல் (சீவக. 522); 5. நீர்த்துளி. அசும்பு சோர் முகிலுடை விசும்பு (பெருங். 5, 4, 134); 6. (கண்) நீர். நினைந்து என்னுள்ளே நின்று நெக்குக் கண்கள் அசும்பு ஒழுக (திவ். பெரியாழ். 5, 4, 8); 7. (புண்) நீர். சில பசும் புண்கள் அசும்பு ஊற (கம்பரா. 5, 304); 8. (யானையின் மத) நீர். கரிபடு மதத்தின் அசும்பிற் சேறு பட்டு அமிழும் (கம்பரா. 6, 3278); 9. மலங்கள், மலசலம். அழுகல் அசும்பு-மலங்கள் (சீவக. 2938, நச்சி. உரை); 10. ஊற்று. ஊற்று-அசும்பு (சீவக. 278, நச்சி. உரை); 11. அருவி. பன்மணி வரன்றி அசும்பு சோர் அருவரை (பெருங். 2, 14, 16); 12. வெள்ளம். அசும்புடைக் குருதி பாயும் ஆகத்தான் (கம்பரா. 6, 1910); 13. நீர்நிலை. ஞாழல் ஓங்கிய தாழ்கண் அசும்பின் ஆம்பலும் குவளையும் (மணி. 8, 6);

ஆ. 14. ஆழ்குழி. வாழை ஓங்கிய தாழ்கண் அசும்பில் படு கடும் களிற்றின் (அகநா. 8, 9-10); 15. கிணறு. (திவா. இடப்பெயர்த் தொகுதி) 16. பொல்லாநிலம். அசும்பில் தேயா அலர் கதிர் ஆழி (பெருங். 1, 38, 152); 17. வழுக்கு நிலம். (நாநார்த்த. 116); 18. (நாஞ்சில் நாட்டில்

உள்ள) ஒரு மலையின் பெயர். (தமிழ். உரி. பனு. 5482);

இ. 19. ஒளி. அசும்பு இருக்கும் பசும் பொன் மன்றத்து (குமர. பிர. சிதம்பர. 518); 20. வீசுகை. (பொதி. நி. 2ஆம் பகுதி அகர வருக்கம் 20); 21. பூ. (ஆ. நி. 140);

ஈ. 22. பற்று. அசும்பு அறத் துடைத்தும் (ஞானா. 41); 23. குற்றம். அசும்பு அற அகன்ற ஞானத் துறவனே (சேதுபு. சங்கர. 92);

உ. 24. வறுமை. (பொதி. நி. 2ஆம் பகுதி அகரவருக்கம் 20).

**சென்னை**

**அரம்**[1] *aram, n.* <அராவு. (*K. Tu. ara, M. aram.*) *File, rasp;* அராவுங்கருவி. அரம் போலுங் கூர்மையரேனும் (குறள். 997).

**அரம்**[2] *aram, n. prob.* அர. *Nether world of serpents;* பாதலம். அரமேவி வெம்பின பணி (இரகு. யாகப். 81).

(அனுபந்தம்)

**அரம்**[1] *aram, n.* <*ara.* (நாநார்த்த.) 1. *Speed;* விரைவு. 2. *That which goes swiftly;* விரைவிற் செல்வது. 3 *Cart, carriage;* பண்டி.

**அரம்**[2] *aram, n. Leather;* தோல். (நாநார்த்த.)

**தஞ்சை**

**அரம்**[1] பெ. அ. 1. கைவாள். அரம் போழ்ந்து அறுத்த கண் நேர் இலங்கு வளை (மதுரைக். 316); 2. அராவுங் கருவி, வாளுக்குக் கூர்வைக்கும் கருவி, வாளரம். அரம் போலும் கூர்மையரேனும் (குறள். 997); விலங்கு அரம் பொரூஉம் வெள் வளை போழ்நரொடு (மணி 28, 44); 3. முள். வெள் அரம் பயில் சுரம் (கம்பரா. 2, 4, 163);

ஆ. 4. படைக்கல வகை. அரமும் கல்லும் வேல் முதலிய அயிற்படை அடக்கி (கம்பரா. 6,31, 12), 5. தோல் (கேடயம்). (நாநார்த்த. 688).

**அரம்**[2] பெ. 1. ஆழம். அரம் கொண்ட கருங்கடல் (கம்பரா. 6, 15, 358); 2. கீழுலகம், பாதலம். அரம் மேவி வெம்பின பணி (இரகு. யாகப். 81).

**அரம்**[3] பெ. (நாநார்த்த). 1. விரைவு; 2. விரைவிற் செல்வது; 3. வண்டி.

## பகுதி 2

(சென்னைத் தமிழ்ப் பேரகராதி, தொகுதி 1, பக். 124, ஒப்பிடுக, அரி[7])

**அரி**[7] பெ. அ. 1. பச்சை. (பிங். 3085) அரிமாச் செகுத்து அடியேனை ஆள் உகந்து (திவ். பெரிய திரு. 9, 10, 8); 2. மஞ்சள் நிறம்; 3. பொன். வால் உளைப்புரவி...நால்குடன் பூட்டி அரித்தேர் நல்கியும் (பெரும்பாண். 488 - 490); 4. நிறம். (மலைபடு. 465, உரை); 5. அழகு. அரி முன்கை (கலித். 54, 3), சில்லரிச் சுணங்கிவை (பெருங். 2, 12, 88); 6. மரகதம். (திவா. பல்பொருள்).

ஆ. 7. திருமால். அரி அரன் பூ மேலோன் (சிலப். வேட்டுவ.); 8. சிவன். முராரி நாரணன் அரி முதல் புகலுறு...அவ்விமலனை உணர்த்தும் (சூதசங்கிதை. யக்கிய. 33, 9); 9. இந்திரன்.(பிங். 3085), அரிப்பெரும் பெயரவன் முதலினோர் அணி விரிப்பவும் ஒத்தன (கம்பரா. 4, 9, 7); 10. இயமன். (பிங். 3085), ஆருயிர் உண்டிடும் அரி தன் ஊர்தியும் ஆர்ப்பன ஓர் புடை (கந்தபு. 6, 16, 40); 11. அக்கினிதேவன். அரியும் மற்று எனது கூறு நீலன் என்று அறைந்திட்டான் (கம்பரா. 1, 5, 26); 12. வாயுதேவன். இரண்டு அரிகள் அருள் ஆண்மையோர் (பாரத. இராச சூய. 17); 13. சூரியன். அரி செத்து உணங்கிய பெருஞ்செந்நெல் (பெரும்பாண். 473); (பிங். 3085), 14. சந்திரன். (பிங். 3085).

இ. 15. நெருப்பு. (பிங். 3085); 16. காற்று. (பிங். 3085); 17. ஒளி (பிங். 3085); 18. புகை. (பிங். 3085); 19. வெம்மை. அரிக் கானத்து ஏகிய (நந்தி. 28);

ஈ. 20. சிங்கம். அரியின் உரிவை மேகலை யாட்டி (சிலப். 12, 62), முந்தும் சுனைகாள் முழைவாழ் அரிகாள் (கம்பரா. 3, 9, 79); 21. சிங்க இராசி. (சூடா. 1, 65); 22. குதிரை. (பிங். 3085), நன்றி கொல் அரிமகம் நடத்த எண்ணியே (கம்பரா. 1, 5, 80); 23. குரங்கு. (பிங். 3085), அரிகுலம் பணிசெய அணைகட்டி (பெரிய. திரு. 1, 2, 2); 24. பாம்பு. (பிங். 3085), காத்து அரிக் கங்கணம் கட்டும் அரனார் (திருச்செந். நிரோட்டகயமக 11); 25. தவளை. அரிப்பொற் கிண்கிணியார்ப்ப இயலி (பெருங். 1, 40, 18); (பிங். 3085), 26. கிளி. (பிங். 3085), மாப்புக்கு அரியும் குயிலும் பயில் பொழில் (பழமலை, 77);

உ. 27. சித்திர மூலம் என்னும் செடி. (மலை); 28. திருத்துழாய். (தைலவ. தைல. 135, 54);

ஊ. 29. மலை. (பிங். 3085); 30. அரிதாளம். (சூடா. 12, 103); 31. திருவோண நட்சத்திரம். அரிமகங் குன்றிருபான் (விதான. குணா. 27).

(சென்னைத் தமிழ்ப்பேரகராதி, தொகுதி 1, பக். 144. ஒப்பிடுக, அலங்கல்)

**அலங்கல்** பெ. அ. 1. அசைகை, அசைந்தாடல். சிலம்பி கோலிய அலங்கல் போர்வை (பதிற்று. 39, 13); 2. (அசை தலைச் செய்வன) நெற்கதிர். கழனி நெல் ஈன் கவை முதல் அலங்கல் (அகநா. 13, 19); 3. மாலை. கமழ் குரல் துழாஅய் அலங்கல் செல்வன் சேவடி பரவி (பதிற்றுப். 31, 9-10), மட்டு அவிழ் அலங்கல் மன்ன குமரற்கு (மணி. 4, 63); 4. நெற்றிமாலை. அரும்பொன் மாலை அலங் கலோடு ஆரம் புலம்ப (சீவக. 349); 5. தளிர். (பிங். 2800); 6. துளசி. (பச். மூ.);

ஆ 7. விளங்குகை, துளங்குகை. ஆடகச் செம்பொன் கிண்ணத்து ஏந்திய அலங்கல் தெண்ணீர் (சீவக. 510); 8. ஒளி. அலங்கல் அம்கண்ணி ஆயிரம் பேர் உடை அம்மான் (திவ். திருவாய். 10, 1, 2);

இ. 9. ஒழுங்கு.

(சென்னைத் தமிழ்ப் பேரகராதி, தொகுதி 1, பக். 253. ஒப்பிடுக, ஆழி[1], ஆழி[2], அனுபந்தம் பக். 112)

**ஆழி**[1] பெ. அ. 1. சக்கரம். (திவா. செயற்கை வடிவப்பெயர்); 2. தேர்ச் சக்கரம். இழையணி நெடுந்தேர் ஆழி உறுப்ப (அகநா. 254, 13); 3. (அரச ஆட்சி நடப்பதைச் சக்கரம் உருள்வது போன்றது என்றல்) அரச ஆணை. நீரக இருக்கை ஆழி சூட்டிய தொல்நிலை மரபின் (புறநா. 99, 3); 4. (தருமச்) சக்கரம். அறக் கதிர் ஆழி திறப்பட உருட்டி (மணி. 5, 76); 5. குயவன் சக்கரம். குயவன் திரி மட்கலத்து ஆழி (கம்பரா. 4, 7, 46);

ஆ. 6. சூரியன். அகவாய் வானத்து ஆழி போழ்ந்தென (அகநா. 229, 2); 7. திருமாலின் சக்கரம். பகை அணங்கு ஆழியும் பால் வெண் சங்கமும் (சிலப். 11, 47); 8. சக்கர வடிவ ரேகை. ஆயிர வாரத்து ஆழி அம் திருந்தடி (மணி. 5, 104); 9. சக்கரவியூகம் என்னும் படை அணிவகுப்பு. ஆழியம் கழனி தன்னுள் அம்பொடு கணையம் வித்தி (சீவக. 757);

இ. 10. வட்டம். (திவா. பண்புபற்றிய பெயர்); 11. (காதலன் வரவை அறிய மகளிர் இழைக்கும் வட்டம்) கூடற் சுழி. குன்றாது கூடுக என...அணியிழையாள் ஆழி இழைத்தாளே (சீவக. 1037); 12. வட்டப்புள்ளி. செய்குறி ஆழி வைகல் தோறெண்ணி (அகநா. 351, 10);

ஈ. 13. தலைக் கோலம் என்னும் அணி. கைவளை ஆழி தொய்யகம்...வாகுவலயம் (பரிபா. 7, 46); 14. மோதிரம். விரலில் சேர் திகழ் ஆழிகளும் (திவ். பெரியாழ். 1, 5, 10); 15. விரல் உறை. ஆழிவாய் விரலில் காமன் அம்பொடு சிலை கையேந்த (சீவக. 833);

உ. 16. வளைவு. ஆழி வரிவில் (கம்பரா. 2, 450); 17. யானைத் துதிக்கையின் வளைந்த நுனி. (அக. நி. 107);

ஊ. 18. அரச கட்டளை. ஆழி நிற்குதி அல்லையேல் பழிவரும் (உபதேச. சிவவிரத. 16);

எ. 19. சக்கரவாளமலை. அன்ன நீள் கிடங்கு சூழ் கிடந்த ஆழியைத் துன்னி (கம்பரா. 1, 3, 21); 20. நேமிப்புள், சக்கரவாகப் பறவை (வட. நி. 148).

**ஆழி**[2] பெ. 1. கடல். உணங்கு கலன் ஆழியில் தோன்றும் (புறநா. 338, 11); 2. கரை. பெருங் கடற்கு ஆழி அனையன் (புறநா. 330, 4); 3. (அ) ஆழம். ஆழி கடலரையா அஞ்சையப் பர்க்கு அறிவிப்பதே (தேவா. திருமுறை. 7. திருநொடி. 10); (ஆ) ஆழ்ந்த இடம். (தமிழ் உரி. பனு. 5654);

**ஆழி**[3] பெ. குதிரைவாய்நுரை (விலாழி). ஆனை மும்மதமும் பரி ஆழியும் (கம்பரா. 5, 2, 150).

**ஆழி**[4] பெ. குன்றி. (பச். மூ.).

(சென்னைத் தமிழ்ப் பேரகராதி, தொகுதி 1, பக். 268. ஒப்பிடுக, இகல்[2])

**இகல்**[2] பெ. அ. 1. மாறுபாடு, பகை. நும் மோர் அன்ன வேந்தர்க்கு...உவகை செய்யும் இவ் இகலே (புறநா. 45, 9), இகல் வெல்லும் வேந்தர்க்கு வேண்டுப்பொழுது (குறள். 481); 2. போர். எயினன் இகல் அடு கற்பின் மிஞிலியொடு தாக்கி (அகநா. 396, 4-5); 3. புலவி. பெண்டின் இகலின் இகந்தாளை...வேள்...திருந்தடி தோய (பரிபா. 9, 35-36); 4. துக்கம். எனக்கென இகல் உளதே (திவ். திருவாய். 6, 4, 5);

ஆ. 5. வலிமை. பொரும் இகல் வேந்தன் (சூளா. 1490);

இ. 6. செருச்செய்தல் என்னும் பெருங்காப்பிய உறுப்புக்களுள் ஒன்று. மந்திரம் தூது செலவு இகல் வென்றி (தண்டி. பொது. 8); 7. சிக்கல், வேறுபாடு. ஞானபாதம் பொருளின் இகல் அறுத்து (சி. போ. பா. மங்கல. 1);

ஈ. 8. ஒப்புமை, உவமை. இகல் இரி கடம் கண்டாய் (ஞானா. 50, 5 பழைய உரை: உவமன் இல்லாத பல கடங்களைக் கண்டாய்).

(சென்னைத் தமிழ்ப் பேரகராதி, தொகுதி 1, பக். 299, ஒப்பிடுக, இயக்கம்[1])

**இயக்கம்**[1] பெ. அ. 1. (மனிதர்) இயங்குகை, நடமாட்டம். நாண் அகத்து இல்லார் இயக்கம் (குறள். 1020); 2. (கண் முதலியவற்றால்) கருத்தை வெளிப்படுத்துகை, குறிப்பு. கண் இணை இயக்கமும் (மணி. 25, 8); 3. மலசலம். ஈர் இயக்க நடை வழி...விடுதல் (காஞ்சிப்பு. ஒழுக்க. 42); 4. (போதல் வருதல் போன்ற) செலவு. குறைவினை முடித்த நிறைவு இன் இயக்கம் (அகநா. 351, 4); 5. வழி. ஏறி நீர் அடைகரை இயக்கம் (சிலப். 10, 90);

ஆ. 6. (விலங்கு) நடை. யானைக் கால் வல் இயக்கம் ஏற்றி (அகநா. 292, 9);

இ. 7. பெருமை. (திவா. பண்பு பற்றிய பெயர்);

ஈ. 8. (இசை) வலிவு, மெலிவு, சமன் என்னும் மூவகைப்பட்ட சுருதித்தானம். (சிலப். 8, 42); 9. இசைப்பாட்டு வகை. முதனடை வாரம் கூடைதிரள் என்று சொல்லப்படும் இயக்கம் நான்கினும் (சிலப். 3, 67, உரை);

உ. 10. (தற்காலம்) கொள்கை அடிப்படையில் ஒன்றுபட்டு இயங்குதல். ஒத்துழையாமை இயக்கம்.

(சென்னைத் தமிழ்ப் பேரகராதி, தொகுதி 1, பக். 325, ஒப்பிடுக, இராவுத்தன்)

**இராவுத்தன்** பெ. 1. குதிரை வீரன், குதிரை வீரருள் தலைவன். இனிமை கூர்ந்து இராவுத்தற்கு நன்மை கூர் வரிசை நல்குவம் (நம்பி. திருவிளை. 28, 86); 2. வீரன். இவுளி முகியைப் பொருத ராவுத்தன் ஆனவனும் (திருவகுப்பு, வேடிச்சி காவலன் வகுப்பு, 22); 3. தமிழ்நாட்டு இசுலாமியரைப் பொதுவாகக் குறிப்பிடும் பெயர். (பே. வ.); 4. வெற்றிலைக் கொடிக்கால் பயிரிடும் இசுலாமியர். (தஞ். வட். வ.); 5. (முகமனாகக் கூறும் கூற்று) முருகன். தனி மயிலேறும் இராவுத்தனே (கந்தரலங். 50).

(சென்னைத் தமிழ்ப் பேரகராதி, தொகுதி 1, பக். 353, ஒப்பிடுக, இழை[3])

**இழை**[3] பெ. 1. அ. பஞ்சுத்துசும்பு; ஆ. பஞ்சால் நூற்ற நூல். வேற்று இழை நுழைந்த வேர் நனை சிதாஅர் (புறநா. 69, 3); 2. (சிலந்தி) வலை நூல். சிலம்பி இழை சுழன்று (தக்கயாக. 127); 3. அந்தணர் பூணூல். இழை வளர் ஆகத்து ஞானசம்பந்தன் (திருமுறை. 11, நம். ஆள். அந். 48);

ஆ. 4. அணிகலன். பொன்செய் புனை இழை கட்டிய மகளிர் (குறுந். 21); 5. மாதர் அணி வடம். மார்பில் இழையினைக் கையாத்து இறுகிறுக்கி (பரிபா. 12, 58); 6. தேர் அலங்காரப் பொருள், பொற்படை. இழை அணிந்து இயல் வரும் கொடுஞ்சி நெடுந்தேர் (குறுந். 345); 7. காப்பு நாண். (வின்.);

இ. 8. மலரால் பூண் வடிவாகக் கட்டிய மாலை. பன்மலர் துதையத்தழையும் கோதையும் இழையும் (கலித். 102, 4 - 5).

(சென்னைத் தமிழ்ப் பேரகராதி, தொகுதி 1, பக். 378, ஒப்பிடுக, ஈமான்)

**ஈமான்** பெ. நம்பிக்கை. மானைக்கொண்டு வரப் போய் ஈமானைக் கொண்டு அகத்தில் புக்கான் (சீறாப்பு. 2, 12, 72).

(சென்னைத் தமிழ்ப் பேரகராதி, தொகுதி 1, பக். 381, ஒப்பிடுக, ஈருள்)

**ஈருள்** பெ. ஈரல். இருவகிர் ஈருளின் ஈரிய துமல் வர (அகநா. 294);

**உக்கிடு-தல்** 6 வி. நழுவுதல். கைவளைகள் ஒலிட்டு அகல்வார் போல் உக்கிடவே (குலசை. 129).

(சென்னைத் தமிழ்ப் பேரகராதி, தொகுதி 1, பக். 474, ஒப்பிடுக, உள்ளூறு[1]-தல்)

**உள்ளூறு[1]-தல்** 6 வி. 1. ஆழ்தல். வள் வாய் ஆழி உள்ளூறுபு உருவ (அகநா. 54); 2. உள்ளே பெறுதல். கரிய புற் பதுக்கையும் கடு நுனைப் பரலும் எரிப்பு உள்ளூறீஇ எஃகின் இயலவும் (பெருங். 2, 12, 192).

**எட்டெழுத்து** பெ. (சமயம்) திருமாலுக்குரிய எட்டு எழுத்துக்களால் ஆன மந்திரம், அட்டாக்கர மந்திரம். அடிமை என்று தமை உணரார்க்கு எட்டெழுத்தும் கேட்க வெளியிட்டருளும் கேசவன் (நூற். திருப். அந். 108, 1)

(சென்னைத் தமிழ்ப் பேரகராதி, தொகுதி 1, பக். 529, ஒப்பிடுக, எயிறு)

**எயிறு** பெ. 1. பல் இலங்கு முத்து உறைக்கும் எயிறு (ஐங்குறு. 185); 2. யானைக் கொம்பு. முளை எயிற்று இரும்பிடி (பெரும்பாண். 53); 3. பன்றிக் கொம்பு. கேழலாய் இளையெனும் திருவினை யேந்தினானரேர்...எயிற்றினுள் (கம்பரா. 2, 13, 119); 4. ஈறு. பல்லிலா எயிறு பையவே தோன்றப் பழுதற நகைக்கும் (காதம்பரி. 18).

**ஏதல்** பெ. பொறாமை. *நெறிப்படியே இப்படி ஏதற்படியே வெம்பஞ்சம் தாங்கினோன்* (மூவரை. விறலி. 52).

(சென்னைத் தமிழ்ப் பேரகராதி, தொகுதி 1, பக் 563, ஒப்பிடுக, ஏர்[1]-தல்)

**ஏர்[1]-தல்** 4. வி. 1. மேல் எழுதல். *பனிக் கடல் பருகி வலம் ஏர்பு...எழிலி* (முல்லைப். 4); 2. பொருந்துதல். *அரி ஏர் உண்கண் அரிவையர்* (சிறுபாண். 215); 3. ஒத்தல். *மருப்பிடைப் பொருப்பு ஏர் மாதிரக் களிறு* (கம்பரா. 5, 3, 79).

(சென்னைத் தமிழ்ப் பேரகராதி, தொகுதி 1, பக். 563, ஒப்பிடுக, ஏர்[2])

**ஏர்[2]** பெ. அ. 1. எழுச்சி. *கற்பும் ஏரும் எழிலும் என்றா* (தொல். பொ. 247); 2. அழகு: *மாவின் தளிர் ஏர் அன்ன மேனி* (மதுரைக். 706); 3. தோற்றப் பொலிவு. *சீயம் அன்னான் இளமை யும் வனப்பும் ஏரும்* (சீவக. 1721);

ஆ. 4. கலப்பை. *ஏரின் உழாஅர் உழவர்* (குறள். 14); 5. ஒரு கலப்பையும் இணைமாடும். *நல் ஏர் நடந்த நசைசால் விளைவயல்* (மதுரைக். 173); 6. உழவு மாடு. (சூடா.); 7. உழவு. *ஏரினும் நன்றால் எருவிடுதல்* (குறள். 1038), 8. ஒரு நாளில் உழக்கூடிய நிலம். (பே.வ.)

இ. 9. நன்மை. *ஏர் அளவில்லா அளவினர்* (திருக்கோ. 308).

(சென்னைத் தமிழ்ப் பேரகராதி. தொகுதி 1, பக். 580, ஒப்பிடுக, ஐயம்[1], ஐயம்[2], ஐயம்[3])

**ஐயம்[1]** பெ. அ. 1. ஒரு பொருளைக் கண்டவழி இதுவெனத் துணியாத நிலைமை, சந்தேகம். (தொல். பொ. 260); 2. அகப்பொருள் துறைகளில் ஒன்றான ஐயம் என்னும் துறை. (தொல். பொ. 94); 3. (தத்துவம்) எண்வகைப் பிரமாணப் போலிகளில் ஒன்று. *ஐயம் என்பது ஒன்றை நிச்சயிக்காமையால் தறியோ மகனோ என்றல்* (மணி. 27, 65 குறிப்பு); 4. (தத்துவம்) ஐயக்காட்சி. (சி. சி. அளவை. 3); 5. ஐயுறுவது போலப் பேசும் ஓர் அணிவகை, ஐயவணி.

ஆ. 6. பிச்சை. *அரங்கக் கூத்தி சென்று ஐயம் கொண்டது.* (மணி. 24, 22); 7. பிச்சைப் பாத்திரம். (திவா. செயற்கைவடிவப் பெயர்).

இ. 8. வெண்ணெய். *அமுதம் ஐயம் நவநீதம் ...வெண்ணெய் நற்பெயர்* (பொதி. நி. 23); 9. மோர் (கதிரை. அக.).

**ஐயம்[2]** பெ. கோழை, சிலேட்டுமம் *பித்தொடு வாதம் மல்கி ஐயம் மேலிடினும் நாடி நோக்கி...நோயை ஒழித்து* (மஸ்தான் நான்மணி 15).

ஐயம்[3] பெ. பொழுது. (பிங். 3237).

(சென்னைத் தமிழ்ப் பேரகராதி, தொகுதி 1, பக். 607, ஒப்பிடுக, ஒழுக்கு[1]தல்)

**ஒழுக்கு-தல்** 5. வி. அ. 1. (துளிகளாக) ஒழுகவிடுதல், *மண்ணாமுத்தம் ஒழுக்கிய வன முலை* (அகநா. 247, 1), *ஒழுக்க என் கணுக்கு ஒரு மருந்து* (திருமுறை 7, 1110); 2. வார்த்தல். *நின் கையினால் ஒழுக்குதி கடன் எலாம்* (கம்பரா. 2, 13, 78);

ஆ. 3. (தத்தம்) நெறியில் நடக்கச் செய்தல். *ஆற்றின் ஒழுக்கி அறன் இழுக்கா இல் வாழ்க்கை* (குறள். 48); 4. நடத்துதல். *வழங்கியல் மருங்கின் உணர்ந்தனர் ஒழுக்கல்* (தொல். எழுத். 483);

இ. 5. நிரல்படக் கட்டுதல். *கண் இடை நவமணி ஒழுக்கி* (சிலப். 3, 116);

ஈ. 6. நீள இழுத்தல். *அச்சில் உறுத்தியன பொன்கயிறு ஒழுக்கியன போலும்* (இரகு. தேனு. 5.)

(சென்னைத் தமிழ்ப் பேரகராதி, தொகுதி1, பக். 613, ஒப்பிடுக, ஒறு-த்தல்)

**ஒறு-த்தல்** 11. வி. அ. 1. கடிதல், கண்டித்தல். *ஒறுப்ப ஓவலை நிறுப்ப நில்லலை... நெஞ்சே* (அகநா. 342, 1-3), *மறுத்த தம்முனை வாய்மையால் ஒறுத்தும் ஆவது உணர்த்தினான்* (கம்பரா. 6, 15, 125); 2. இகழ்தல், எள்ளுதல். *யாரே பிழைத்தது ஒறுக்கிற்பவர்?* (குறள். 779); 3. வெறுத்தல். (திவா. செயல்பற்றிய பெயர்);

ஆ. 4. தண்டித்தல். *நீமெய் கண்ட தீமை காணின் ஒப்பநாடி அத்தக ஒறுத்தி* (புறநா. 10, 4);

இ. 5. அலைத்தல், வருத்துதல். *ஒறுப்ப ஓவலர், மறுப்பத் தேறலர்* (குறுந். 34). *உருவி லாளன் ஒறுக்கும் துன்பமும்* (சிலப். 14, 36);

ஈ. 6. அழித்தல். *ஒறுத்தானாம் ஒன்னார் புரங்கள் மூன்றும்* (தேவா. திருமுறை. 6, 15, 11) 7. வெட்டுதல். *ஒறுத்து ஒளிர் வாளெனும் உரவு நாகம்* (கம்பரா. 6, 15, 308); 8. கொல்லுதல். *மாதை ஒறுத்தல் வசைதிறம் அன்றோ* (கம்பரா. 6, 25, 32); 9. ஒடுக்குதல். (வின்.) 10. குறைதல். *உற்ற ஆசையில் கன்றுக்கு ஒறுப்புறப் பற்றி ஆன்முலை பால்கொளும் பாதகர்* (சிவதரு. 12, கோபுர. 171); 11. ஊனமாதல். *ஒறுவாய்* (செ. ப. பேர.)

(சென்னைத் தமிழ்ப் பேரகராதி, தொகுதி 1, பக். 618, ஒப்பிடுக, ஓசனி-த்தல்)

**ஓசனி-த்தல்** *11 வி. 1.* போதற்கு ஒருப்பட்டு முயலுதல். *வேனில் வேந்தன் வேற்றுப் புலம் படர,* **ஓசனிக்கின்ற** *உறு வெயில் கடை நாள்* (சிலப். 14, 124-125); 2. சிறகடித்துப் பறக்க முயலுதல். **ஓசனிக்கின்ற** *அன்னம்* (சீவக. 2652).

(சென்னைத் தமிழ்ப் பேரகராதி, தொகுதி 1, பக். 629, ஒப்பிடுக, ஓலை)

**ஓலை** பெ. 1. தென்னை, பனை முதலிவற்றின் இலை. (தொல். பொ. 641); 2. ஓலைக் குடை. *உறைப்புழி* **ஓலை** *போல* (புறநா. 290); 3. ஓலை முடங்கல். *மாதவி* **ஓலை** *மலர்க் கையின் நீட்ட* (சிலப். 13, 82); 4. (அ) காதில் அணியும் ஓலைச் சுருள். **ஓலை** *இட்ட குழைச்சிகள்* (திருப்பு. 332); (ஆ) பொன்னால் செய்யப்படும் காதணி. *பொன் செய்* **ஓலை** *ஒரு காது* (தேவா- திருமுறை. 4, 8, 10); 5. ஓலைப் பாய். *பறி* **ஓலைச்** *சயனத்தார்* (திவ். பெரியாழ். 1, 1, 5); 6. எழுத்தாணி கொண்டு எழுதப் பயன்படும் ஓலை. *வெள்ளோலை கண்பார்க்கக் கையால் எழுதானை* (தனிப்பாடல்); 7. செய்தி. **ஓலை** *கொண்டு வருகிறான்* (தஞ்சை வட். வ.); 8. பேய்முன்னை மரம்.(செ. ப. பே.)

(சென்னைத் தமிழ்ப் பேரகராதியில் இங்குக் காட்டப் பெறும் கச்சு[5] இடம் பெறவில்லை)

**கச்சு[5]** (ஹஜ்) பெ. மக்காவுக்கும் மதினாவுக்கும் இசுலாமிய மதத்தினர் மேற்கொள்ளும் புனிதப் பயணம். *நயமுற நடக்கும் அந்நாளில்* **கச்சினுக்கு** *இயல்பெற யாவரும் ஈண்டினார்* (சீறாப்பு. 3, 2, 1)

(சென்னைத் தமிழ்ப் பேரகராதி, தொகுதி 2, பக். 651. ஒப்பிடுக, கட்டுக்கழுத்தி)

**கட்டுக்கழுத்தி** பெ. 1. தாலி அணிந்து வாழ்பவள், சுமங்கலி. **கட்டுக் கழுத்தி** *உட்சுழுத்திலே சரடு இல்லாது இருக்கலாமா?* (பே. வ.); 2. மனைவி. *கைப்பொருள் அற்றால்* **கட்டுக் கழுத்தியும்** *பாராள்* (பழ.)

(சென்னைத் தமிழ்ப் பேரகராதி, தொகுதி 2, பக். 654. ஒப்பிடுக, கட்டுரை[2])

**கட்டுரை[2]** பெ. அ. 1. புனைந்துரை. **கட்டுரை** *வகையான் எண்ணொடு புணர்ந்தும்* (தொல். பொ. 434), *பலபல* **கட்டுரை** *பண்டையின் பாராட்டி* (கலித். 14, 8); 2. பொய்யுரை, பொய். *வெவ்வினை தூண்டிடக்* **கட்டுரை** *சொல்லல் மேயினாள்* (கம்பரா. 2, 2, 52); 3. வெற்றுரை. **கட்டுரையே** *யார் ஒருவர் காண கிற்பாரே* (திவ். திருநெடுந். 3), *எல்லையுட் புகுந்து* **கட்டுரை** *பேணலாம்* (சூளா. 1213);

ஆ. 4. பொருள் பொதிந்த சொல். *கோட்டமில்* **கட்டுரை** *கேட்டனன் யான்* (சிலப். பதி. 54); 5. ஒரு வார்த்தை. **கட்டுரையாட்டியேன்** (சிலப். 23, 23); 6. உறுதிச் சொல். **கட்டுரை** *விரித்தும் கற்றவை பகர்ந்தும்* (மணி. 25, 5); 7. சான்றுரை. *உவரி நீர்க்கடல் தொட்டார் எனின், வேறோர்* **கட்டுரையும்** *வேண்டுமோ* (கம்பரா. 1, 11, 8); 8. நற்சொல், *விரிச்சி. காக்கை வாயினும்* **கட்டுரை** *கொள்வர்* (திவ். பெரியாழ். 5, 1, 1,);

இ. 9. விளங்கச் சொல்லுகை (கழ. அக.); 10. ஒரு பொருள் பற்றிய விளக்கவுரை (தற்காலம்).

(சென்னைத் தமிழ்ப் பேரகராதி, தொகுதி 2, பக் 656. ஒப்பிடுக, கட-த்தல்)

**கட-த்தல்** 12. வி. அ. 1. எதிர் நிற்றல். **கடந்து** *அடு தானைச் சேரலாதனை* (புறநா. 8,5); 2. பொருதல். *ஒன்னார்க்* **கடந்தட்டான்** (பரிபா. 15, 44-45); 3. வெல்லுதல். *பேரமர்க்* **கடந்த** (பெரும்பாண். 416); 4. அழித்தல். *வெப்புடைய அரண்* **கடந்து** (புறநா. 11, 8);

ஆ. 5. அளத்தல். *இருநிலம்* **கடந்த**...*முந்நீர் வண்ணன்* (பெரும்பாண். 29); 6. கடந்து போதல். **கடக்கருங்** *கானத்து* (நாலடி. 398); 7. தாவுதல். (திவா. செயல்பற்றிய பெயர்); 8. தாண்டிச் செல்லுதல். *இங்கு ஆர்* **கடத்திர்** *எனை* (கம்பரா. 5, 1, 75); 9. நீங்குதல். *பிறப்பு இறப்பைக்* **கடந்தார்** (திருவாச. 5, 24);

இ. 10. (வீடு முதலியன கடந்து) வெளியே போதல். *மங்கை இடங்கடவா மாண்பினாள்* (திருமுறை. 11. சேர. ஞான. 100); 11. ஓடி விடுதல். *இன்னம் மாண்டு கிடத்திரோ* **கடத்திரோ** (கம்பரா. யுத்த. 2925);

ஈ. 12. மீறுதல். *கவராக் கேள்வியோர்* **கடவார்** *ஆகலின்* (மணி. 1, 10); 13. தவறுதல். *அவ்வுரை* **கடக்கலாமோ** (கம்பரா. 6, 4, 115); 14. மேற்படுதல். *கரும்பையும்* **கடந்த** *சொல்லாள்* (கம்பரா. 1, 12, 36);

உ. 15. ஊடுருவிப்போதல். *மேருவை உருவிப் போய் விண்ணகத்தையும்* **கடப்பன** (கம்பரா. 6, 15, 331).

ஊ. 16. ஓர் ஓசையான தன்மை நீங்கிப் பலவோசையாய் வருதல் (நம்பி திருவிளை. 57, 26, குறிப்புரை); 17. கழிந்து போதல். **கடந்து** *போனதைப் பற்றிப் பேசுவதில் பயனில்லை.* (பே. வ.)

**கண்ணும் கயந்தலையும்** பெயர்த் தொடர். பிள்ளை குட்டி. கண்ணும் கயந்தலை யுமாகப் போகிறார்கள் (குமரி. வட். வ.)

(சென்னைத் தமிழ்ப் பேரகராதி, அனுபந்தம், பக். 202. ஒப்பிடுக, கலிமா)

**கலிமா** பெ. (இசுலாம்.) 1. இசுலாமிய மதத்தினர் அல்லாவைத் தவிர வேறு கடவுள் இல்லை, முகமது அவருடைய திருத்தூதர் என்னும் பொருள்படச் சொல்லும் மூல மந்திரம். கன்னல் அம் சுவைக் கலிமாவை நன் நபிக்கு இன்னணம் இயம்பும் என்று இசைத்தல் போலுமே (சீறாப்பு. 1, 9, 20).

**கிளையார்** பெ. உறவினர். கிளையா ரெல்லாம் வந்தாயிற்றா? (குமரி. வட். வ.)

**கீழ்க்கடையாக** வி. அ. வழக்கமாக. கீழ்க்கடையாக அங்குதான் சாமான் வாங்கு கிறோம் (குமரி. வட். வ.)

(சென்னைத் தமிழ்ப் பேரகராதி, தொகுதி 2, பக். 1072. ஒப்பிடுக, கூதறை)

**கூதறை** பெ. 1. இழிந்த குணமுடைய வன், ஒழுக்கமற்றவன். மாண்ட மனமுடைய ஆகாத கூதறைகள் (பழ. நா.106); 2. கிழியல். கூதறை ஓலை முடைய ஆகாது (குமரி வட். வ.)

(சென்னைத் தமிழ்ப் பேரகராதியில் இங்குக் காட்டப்பெறும் கூம்பு[3] இடம்பெறவில்லை)

**கூம்பு**[3] பெ. கார்த்திகைத் திருநாள். கூம்புக்குப் பிறகு திருமணம் வைக்க மாட்டார் கள் (கோவை வட். வ.).

(சென்னைத் தமிழ்ப் பேரகராதி, தொகுதி 2, பக். 1108. ஒப்பிடுக, கைநனை-த்தல்)

**கைநனை-த்தல்** 11 வி. பிறர் வீட்டில் உண்ணுதல். (உடன்பாட்டுப் பொருளில் மிக அருகிய வழக்கு.) நான் அவன் வீட்டில் கை நனைக்க மாட்டேன் (பே. வ.)

(சென்னைத் தமிழ்ப் பேரகராதி, தொகுதி 2, பக். 1160. ஒப்பிடுக, கொழுந்தன்)

**கொழுந்தன்** பெ. 1. கணவனுடைய அண்ணன் அல்லது தம்பியைக் குறிக்கும் உறவுப் பெயர். கொழுந்தா என்ருள் (கம்பரா. பிராட்டி. 9.) 2. கணவனின் தம்பி (திருநெல். வட். வ.).

சென்னைத் தமிழ்ப் பேரகராதி, தொகுதி 2, பக். 1185. ஒப்பிடுக, கோதை[1])

**கோதை**[1] பெ. அ. 1. தூக்குமாலை. கோதையின் பொலிந்த சேக்கை துஞ்சி (மதுரைக். 713); 2. மகளிர் கூந்தலில் அணியும் மலர் மாலை. மகளிர் கோதை மைந்தர் மலையவும் (பட்டி. பா. 110); 3. முத்துமாலை. சாந்தமொடு தண் கமழ் கோதை (பதிற்று. 88, 31); 4. நெற்றிக் கட்டு. தார்கொண்டாள் தலைக் கோதை தடுமாறிப் பூண்ட (கலித். 6?, 15); 5. பொன்னால் செய்த அணிகலன். பொடியழல் புறம் தந்த பூவாப்பூம் பொலன் கோதை (கலித். 54, 2).

ஆ. 6. பெண். நறுமலர்க் கோதைக்கு நல்லறம் உரைத்து (மணி. பதி. 81); 7. ஆண்டாள். பைங்கமலத் தண்தெரியல் பட்டர் பிரான் கோதை (திவ். திருப். 30); 8. மகளிர் கூந்தல். கோதையொடும் ஓசிக்கொம்பென வீழ்ந்தனள் (கம்பரா. 3, 1, 38):

இ. 9. சேரமன்னர். கவிகை வண்மைக் கடுமான் கோதை (புறநா. 54, 8);

ஈ. 10. ஒழுங்கு. கோதை மாதவி கொழுங் கொடி எடுப்ப (சிலப். 4, 113)

உ. 11. நெற்சுமை (யாழ். அக.)

**சதக்கு** பெ. (இசுலாமிய.) தானதருமம். வரிசை நல் நினைவொடும் சதக்கா வழங்கிடுமின் (சீறாப்பு. 3, 15, 72).

(சென்னைத் தமிழ்ப் பேரகராதி, தொகுதி 3, பக். 1357. ஒப்பிடுக சாடு[1]-தல்)

**சாடு[1]-தல்** 5. வி. அ. 1. சினங் கொண்டு பாய்தல். பருந்தின் நிலத்து நிழல் சாடி ஆபரந்தன்ன செலவிற் பல் யானை (பதிற்று. 77, 9-10); 2. குத்துதல். நீள் மருப்பு உறச் சாடி... நிறுத்தன ஏறு (கலித். 105, 33);...நீறு எடுப்பவை நிலம் சாடுபவை (கலித்.106, 6); 3. குத்தித் துளைத்தல். பாய்ந்த பொதுவனைச் சாடி நுதி நுனைக் கோட்டால் குலைப்பதன் தோற்றம் (கலித். 101, 28); 4. வடு உண்டாக்குதல். குறி பொய்த்தார் கூர் உகிர் சாடிய மார்பும் (கலித். 91, 11);

ஆ. 5. அடித்தல். மரத்தால் சாடிக் கொன்றனன் சிலவரை (கம்பரா. 5, 7, 36); 6. கொல்லுதல், அழித்தல். ஆடு கொடிப்படை சாடி அறத்தவரே ஆள (கம்பரா. 2, 12, 22); 7. தாக்குதல். சாடினான் பாணிச் செண்டால் (நம்பி. திருவிளை. 61. 12); 8. (கோலால் கூட்டத்தினரைத் தள்ளி) விலக்குதல். பூத கணாதிபர் பிரம்பினால் சாட (சிவரக. மேரு. 22);

இ. 9. ஒடித்தல், முறித்தல். கொன்றை காயா...முல்லை சாடி (கந்தபு. 1, 4, 10), கோளரைத் தடம் குங்குமத் தடஞ் சில சாடி (நைடதம் நாடு. 4); 10. உடைத்தல், தகர்த்தல், கரை சாடும் ஓதை (அரிச். புரா. நாட்டு. 28).

(சென்னைத் தமிழ்ப் பேரகராதி, தொகுதி 3, பக். 1484-85. ஒப்பிடுக சீரா[1], சீரா[2] சீரா,[3] சீரா[4])

**சீரா**[1] பெ. வீரர் தலைக்குப் பாதுகாப்பாக அணியும் கவசம் (தலைச்சீரா). பழைய வாள் வேல் கிடந்த பேர் ஆசு சீரா ஈட்டி...இனையன வேண்டும் (நம்பி திருவிளை. 45, 9);

**சீரா**[2] பெ. 1. போர்க் கவசம். திரை மேற் சீரா மராம நிறந் தொட்ட சேய் (கந்தரந். 80); 2. உடைவாள். பாலன் அரையிற் கட்டும் சீராவும் கையிற் சிறுவாளும் (கந்தரலங். 81).

**சீரா**[3] பெ. பலாச மரம். (மலை.)

**சீரா**[4] 1. சர்க்கரைப் பாகு. (பே. வ.); 2. ஒரு தின்பண்ட வகை. (செ. ப. பே.)

(சென்னைத் தமிழ்ப் பேரகராதி, தொகுதி 3, பக். 1636. ஒப்பிடுக, சேரி)

**சேரி** பெ. அ. 1. ஊர். அம்பல் சேரி அலராங்கட்டே (ஐங். 279); 2. முல்லை நிலத்து ஊர். (தொல். பொ. 18, நச்சி. உரை); 3. தெரு. ஓர் ஊர் வாழினும் சேரி வாரார் (குறுந். 631);

ஆ. 4. (ஒரு தொழில் செய்பவர், ஓர் இனத்தவர்) வாழுமிடம், குடியிருப்பு, (அ) மீன் சீவும் பாண் சேரி (புறநா. 348, 4); (ஆ) வலைவாழ்நர் சேரி (சிலப். 7, 10, 1); (இ) தம் (—ஆயர்) சேரிக்கு உற்பாத சாந்தியாக ஆய்ச்சியர் குரவைக் கூத்தாடின முறைமையும் (சிலப். பதி. 77, உரை); (ஈ) அந்தணர் சேரியும் (பெருங். 1, 43, 174);

இ. 5. பிறநாட்டு வணிகர் வாழுமிடம். மாலைச் சேரி மருங்கு சென்றெய்தி (சிலப். 6, 133, அரும்ப. பரதேசிகள் இருப்பு); 6. தாழ்ந்தோர் இருப்பு. 7. (தற்காலம்) நகரத்தில் குடிசைகள் நிரம்பிய பகுதி. சேரி வாழ் மக்கள்.

(சென்னைத் தமிழ்ப் பேரகராதியில் இங்குக் காட்டப்பெறும் சோகை[2] இடம்பெறவில்லை)

**சோகை**[2] (கிறித்தவ.) சாத்தான். ஏவையும் சோகை நோக்கியே யாமும் இம்மரக்கனி அருந்திய...(ஞானதிக்க. 28, 36).

**தவதி** பெ. சிற்பாசிரியர், (ஸ்தபதி). சிவபுரி செய் தவதி முதலோர் பூலோகத்தின் மிசைப் புகுவர் (சிவதரு. சிவஞான. 74).

(சென்னைத் தமிழ்ப் பேரகராதி, தொகுதி 3, பக். 1880. ஒப்பிடுக, திமிலை)

**திமிலை** பெ. அ. 1. பண்டைய முழவுகளுள் ஒன்று; வீரமுழவு. (சிலப். 3, 27, உரை); 2. சல்லரி என்ற பறை வகை. (பிங். 1514); 3. (இடை சுருங்கிய) இருமுகப் பறை. ஒப்பின்றித் திமிலை பறை அறைந்து (திருப்புகழ்); 4. வன்மை என்னும் இசைக்கருவி வகை (பஞ்ச மரபு. 92, உரை); 5. தண்ணுமை வகையுள் ஒன்று. (பஞ்ச மரபு. 95, மேற்கோள்);

ஆ. 6. செம்பழுப்பு நிறமுடையதாயும் 18 அங்குல நீளம் வளர்வதாயுமான திருக்கை மீன் வகை; 7. மங்கல் சிவப்பு நிறமுள்ளதும் 10 அங்குலநீளம் வளர்வதுமான கடல் மீன் வகை. (செ. ப. பே.)

(சென்னைத் தமிழ்ப் பேரகராதி, தொகுதி 4, பக். 1985. ஒப்பிடுக, துரை[1], துரை[2])

**துரை**[1] பெ. 1. தலைவன். எனக்கு நீர் ஒரு துரை அலவோ (தில்லைக் கலம்பகம் 58); 2. இந்திய நாட்டை ஆட்சிபுரிந்த ஆங்கிலேயரையும், பிற ஐரோப்பிய நாட்டாரையும் குறித்த சொல் (பே. வ.); 3. ஆங்கிலேயர் காலத்தில் பாளையங்களை ஆண்ட பாளையப்பட்டுக்காரரைக் குறித்த சொல்; 4. ஆங்கிலேயர் காலத்தில் பெரும் பதவி வகித்தவரைக் குறித்த சொல் (பே. வ.); 5. குழந்தையை அருமை பாராட்டிக் கூறும் கொஞ்சு மொழி. (பே. வ.)

**துரை**[2] பெ. 1. வேகம். துரை மாண்டவா பாடித் தோணோக்கம் ஆடாமோ (திருவாச. 15, 14); 2. மிகுதிப்பாடு. (சி. சி. 2, 32, சிவஞான. உரை; துரை-மிகுதிப்பாடு); 3. நோய். எம்முறு பிறவித் துரை துடைத்து ஆண்ட தொண்டர் பிரான் (சடகோபரந். 47).

(சென்னைத் தமிழ்ப் பேரகராதி, தொகுதி 4, பக். 2073. ஒப்பிடுக, தேனி-த்தல்)

**தேனி-த்தல்** 11 வி. 1. தேனின் இனிமையைச் சுவைப்பது போன்று இறைவனை அனுபவித்தல். களிப்பார் தேனிப்பார்...உன் திருவார்த்தை விரிப்பார் (திருவாச. 21, 9); 2. தியானித்தல்; 3. மகிழ்தல். கேசவன் பேரிட்டு நீங்கள் தேனித்திருமினோ (திவ். பெரியாழ். 4, 6, 1).

**தேனூறல்** பெ. (யோகம்) சகத்திரத் தளத்திலிருந்து வழிகிற அமிர்தம். தேனூறல் உண்டு தெளிதலும் ஆமே (திருமந். 894).

**நாயனா** பெ. 1. தெலுங்கு நாட்டவரும், தமிழ்நாட்டில் தெலுங்கைத் தாய் மொழியாகக் கொண்டவரும் தந்தையைக் குறிக்கும் சொல்; 2. சில பகுதிகளில் பெரியோரையும் சிறுவரையும் குறிக்கும் சொல்.

(சென்னைத் தமிழ்ப் பேரகராதி, தொகுதி 4, பக. 2223. ஒப்பிடுக, நாயனார்)

**நாயனார்** பெ. 1. தலைவன்; 2. கடவுள். (தென். இந், ௬. 1-68-80); 3. சிவபெருமான். *சிராப்பள்ளி மேவிய* நாயனார் *என நம் வினை நாசமே* (தேவா. திருமுறை. 5, 85, 4); 4. சிவனடியார். *ஞானசம்பந்தர் இந்த* நாயனார் *காணும் என்பார்* (திருமுறை. 12. 2705); 5. அருகன். (சிலப். 11, 4. அரும்ப.); 6. ஆசாரியர். *உய்யவந்த தேவ* நாயனார், (சைவ வழக்கு); 7. திருவள்ளுவருக்கு வழங்கும் ஒரு சிறப்புப் பெயர்; 8. சிறு தெய்வங்களின் பட்டப்பெயர். *சித்திரபுத்திர* நாயனார் *கதை*; 9. தமிழ்நாட்டுச் சமணருக்கும், சைவ வேளாளரில் ஒரு பிரிவினருக்கும், கைக்கோளர் போன்ற வேறு சில பிரிவினருக்கும் வழங்கும் மதிப்புடைப் பெயர். (தமிழக வடமாவட்டங்கள் வழக்கு.)

(சென்னைத் தமிழ்ப் பேரகராதி, தொகுதி 4, பக். 2308. ஒப்பிடுக, நீரகம்)

**நீரகம்** பெ. 1. (கடல் சூழ்ந்த இடம்) பூமி. நீரகம் *பனிக்கு...கடுந்திறல்* (மலைபடு. 81); 2. கச்சியிலுள்ள திருமால் கோயில்களுள் ஒன்று. (திவ். திருநெடுந். 8); 3. (யோக ஆதாரத்தானங்களில் மூன்றாவது) மணிபூரகம் (தத்துவம்).

(சென்னைத் தமிழ்ப் பேரகராதி, தொகுதி 4, பக். 2411. ஒப்பிடுக பஞ்சவர்)

**பஞ்சவர்** பெ. 1. பாண்டியர். *இவனே செருமான்* பஞ்சவர் *ஏறே* (புறநா. 58, 3); 2. பாண்டவர் ஐவர். பஞ்சவர்க்குத் *தூது நடந்தானை* (சிலப். 17, படர்க்கைப் பரவல். 3); 3. (சமணம்) சந்திரன் சூரியன், ஏனைய கோள்கள், 27 நட்சத்திரங்கள், தாரகைகள் ஆகிய ஐந்து சோதிட்கர். *அகிற் புகை தவழ்ந்து வானத்து அரு விசும்பு அறுத்து...*பஞ்சவர் *விமானம் முட்டி* (சீவக. 600 நச்சி. உரை).

(சென்னைத் தமிழ்ப் பேரகராதி, தொகுதி 4, பக். 2411. ஒப்பிடுக, பஞ்சவன்)

**பஞ்சவன்** பெ. 1. பாண்டவர். *பழியொடு படராப்* பஞ்சவ *வாழி* (சிலப். 20, 33). 2. ஐந்து நிலத்தையுமுடைய நாட்டிற்குத் தலைவன். *வையத்து ஐந்து நிலத்து ஓங்கும் நகர்கட்கு எல்லாம் பயனாய நகர்* பஞ்சவன் *தன் மதுரை* (நம்பி. திருவிளை. திருநகர. 3.)

**படம்பக்கநாதர்** பெ. படம்பக்கம் என்னும் இசைக் கருவியை (பறையை) முழக்குபவராகிய திருவொற்றியூர்ச் சிவபெருமான்.

**படம்பக்கம்** பெ. தோற்கருவி வகையைச் சார்ந்த இசைக்கருவி. படம்பக்கம் *கொட்டும் திருவொற்றியூரீர்* (தேவா. திருமுறை. 7, 2, 6).

**பண்மை** பெ. தகுதி பண்மையதாகப் *பரந்த ஐம்பூதத்தை* (திருமந். 687).

(சென்னைத் தமிழ்ப் பேரகராதி, தொகுதி 5, பக். 2600. ஒப்பிடுக, பாணான்)

**பாணான்** பெ. 1. திருமால் கோயிலில் பரிவட்டம் தைத்தல், தேர் அலங்கரித்தல் முதலிய பணிகள் செய்யும் தையற்காரர் (திருவல்லி. கோ. வ.); 2. தையற்கார இனத்தைச் சார்ந்தவர்.

(சென்னைத் தமிழ்ப் பேரகராதி, தொகுதி 5, பக். 2657. ஒப்பிடுக, பிண்டி[4])

**பிண்டி[4]** பெ. 1. அசோகு. *வண் காது நிறைந்த* பிண்டி *ஒண்தளிர்* (திருமுரு. 31); 2. அசோக மரத்தின் கீழ் அமர்ந்தோனாகிய அருகன். பிண்டி *பேணும் பொறியிலியேன் தனைப் பொருளா ஆண்டு கொண்டு* (தேவா. திருமுறை. 6, 40, 6)

(சென்னைத் தமிழ்ப் பேரகராதி, தொகுதி 5, பக். 2815. ஒப்பிடுக, புனல்[1])

**புனல்[1]** பெ. அ. 1. நீர். *தண்*புனல் *பரந்த* (புறநா. 7, 11); 2. நீர்ப் பெருக்கு, வெள்ளம். *வஞ்சிக் கோன் தன்னைப்* புனல்*கொள்ள* (சிலப். 21, 12); 3. ஆறு. *மழை கொளக் குறையாது,* புனல் *புக மிகாது* (மதுரைக். 424); 4. கடல் *காமக் கடும்*புனல் *நீந்திக் கரை காணேன்* (குறள். 1167); 5. நீர்நிலை. *இரும்*புனல் *ஆடிய... மைந்தரும் மகளிரும்* (கம்பரா. 7, 17, 30); 6. குளிர்ச்சி. *மண்*புனல் *இளவெயில்* (பரிபா. 15, 27); 7. மிகுதி. புனல*ங் கள்ளின் பொலன் தார்க் குட்டுவன்* (புறநா. 349, 9);

ஆ. 8. இருபத்து மூன்றாவது நட்சத்திரமான பூராடம். *விட்டம்* புனல் *உத்திராடம்* (விதான குணாகுண. 29);

இ. 9. குதலை (கதிரை. அக.);.

ஈ. 10. வாலுளுவை (சங்க. அக.)

**பூனைவாடை** பெ. புனுகு. பூனை*வாடை மாசு சாந்தம் சந்தனமும்* (குமார. குற. தரு. 28, 2).

**பொன்மண்** பெ. (தத்துவம்) மூலாதாரம். பொன்மண் *அடையில் வழிந்துள் இருந்தது* (திருமந். 815)

(சென்னைத் தமிழ்ப் பேரகராதி, தொகுதி 6, பக். 3376. ஒப்பிடுக, மொந்தை)

**மொந்தை** பெ. அ. 1. கையால் வாசிக்கும் ஒருமுகப் பறையாகிய ஓர் இசைக்கருவி. *குடமுழா* மொந்தை *வாசித்து* (திருமுறை. 11, காரைக். பதிகம். 1, 9), (பிங் 1515); 2. சிவபிரான் இரவு

எரியாடலுக்கு முழங்கும் கருவிகளில் ஒன்று. முரலும் கின்னரம் மொந்தை முழங்கவே (திருமுறை 5, 55, 9); 3. முழவு வகைகளில் ஒன்று, தோலால் செய்யப்பட்ட கருவி. (பஞ்சமரபு 95, உரை).

ஆ. 4. சிறு மட்பாண்டவகை. நீர் மொள்ள மொந்தைக்கும் வழியில்லை (அருட்பா. 5. கந்தர் சரண. தனிப்பா. 2); 5. சிறு மரப்பாண்டம்; 6. சிறு பாத்திர வகை; 7. நெல் பட்டரைக்குச் சாணிப்பால் குறிபோடப் பயன்படுத்தும் மூக்கு வைத்த தகரப் பாத்திரம். (தஞ். வ.); 8. கள் விற்போர் பயன் படுத்தும் குடுவை அல்லது கலயம்; மோனம் கிறுக்குதடி...மொந்தைப் பழைய கள்ளைப் போலே (பாரதி கண்ணன். கா. 10); 9. (மொந்தை அளவு) கள். இரண்டு மொந்தை போட்டான் (பே. வ.);

இ. 10. பருத்து மொத்தையாய் உள்ள பொருள். (பே. வ.)

## பகுதி 3

(சென்னைத் தமிழ்ப் பேரகராதி, தொகுதி 1, பக். 605, ஒப்பிடுக, ஒல்லொல்லி முதல் ஒலியொலியென்று ஒலித்தல் வரை)

**ஒல்லொல்லி** பெ. (ஒல்லி என்பது இரட்டித்து வந்தது) மிகவும் மெலிவுடைய—(பே. வ.).

**ஒல்வழி** வி.அ. 1. பொருந்திய இடத்து. ஒல்வழி ஒற்று இடை மிகுதல் வேண்டும் (தொல். எழுத். 114); 2. பொருந்திய காலத்து. ஒல்வழி அறிந்து உதவும் பண்பினான்.

**ஒலரி** பெ. நல்ல தண்ணீரில் காணலாகும் பச்சை நிறமுடைய சிறுமீன் (செ. ப. பேர.)

**ஒலி-தல்** 4. வி. தழைதல், நீண்டு வளர்தல் ஒலிந்த பகன்றை விளைந்த கழனி (மதுரைக். 261)

**ஒலி[1]-த்தல்** 11. வி. 1. தழைத்தல். ஒலித்த பகன்றை இரும் சேற்று அள்ளல் (அகநா. 176, 10); 2. அசைதல். தழை ஒலித்தன (கம்பரா. 1, 3, 62).

**ஒலி[2]-த்தல்** 11. வி. 1. (அ) ஓசை வெளிப்படுத்துதல். ஆடுமகள் அரிகோற் பறையின் ஐயென ஒலிக்கும் (அகநா. 151, 10), கெட்டித் தங்கமானால் கலீரென்று ஒலிக்குமா (பழ.), (ஆ) ஆரவாரித்தல். இளையரும் ஒலிப்பர் (நற். 307), ஒலித்தக்கால் என் ஆம் உவரி எலிப்பகை (குறள். 763);

2. (ஓசைபட) ஆடை துவைத்தல். ஊர் ஒலிக்கும் பெருவண்ணார் (பெரியபு. திருக்குறிப்பு. 133);

3. விளக்குதல். உதிர் துகள் உக்க நின் ஆடை ஒலிப்ப (கலித். 81, 31, நச்சி.)

**ஒலி[3]-த்தல்** 11. வி. மிகக் காய்தல். (கதிரை. அக.)

**ஒலி[1]** பெ. 1. சித்திரமூலம் என்னும் கொடிவேலி. (கதிரை. அக.); 2. மணமுள்ள ஒரு செடி. (குண. பக். 326).

**ஒலி[2]** பெ. 1. (அ) பல்வகை ஓசை. ஒலி அவிந்து அடங்கி யாமம் நள்ளென (நற். 303); (ஆ) உயிரினங்கள் எழுப்பும் ஓசை. புள் ஒலிக்கு அமர்த்த கண்ணள் (ஐங். 382); (இ) பேரோசை. மலிஓதத்து ஒலி கடல் (பட்டினப். 98); (ஈ) பொருளுடைய ஓசை, எழுத்தொலி. ஓசை ஒலி எலாம் ஆனாய் நீயே (தேவா. திருமுறை. 6, 38. 1);

2. (அ) சொல். நின் உருவமும் ஒலியும் ஆகாயத்து உள, (பரிபா. 4, 31); இவை (— மாற்றம், நுவற்சி...) ஒலிப் பண்பை ஏனைப் பெயர் வினைகளை ஒருவாது (நன். சங்கர. 434);

(ஆ) பிறர் கேட்க ஓதுகை. (சைவச. பொது. 151. உரை);

3. (அ) இடி. (பிங். 3241); (ஆ) காற்று. (திவா. தெய்வப்பெயர்)

**ஒலிக்குறிப்பு** பெ. குறித்ததோர் ஒலியினை ஒலியுருவில் குறித்தல். (கடகட, மடமட என்றாற் போல்); ஒன்றன் ஒலியை ஒத்து எழுப்பப் பெறும் ஒலி

**ஒலிகச் செடி** பெ. (மருத்துவம்) கொடிவேலி. (த. சித். அக.)

**ஒலிகவிப்பத்திரி** பெ. (மருத்துவம்) மாசிப்பத்திரி எனும் மணமுள்ள பூண்டு. (த. சித். அக.)

**ஒலிச்சித்திரம்** பெ. (தற்காலம்) வானொலியில் திரைப்படத்தை ஒலிபரப்பும் நிகழ்ச்சியின் தலைப்பு. ஒலிச்சித்திரம் கேட்டீர்கள்.

**ஒலிசத்தி** பெ. (தத்துவம்) நாதசத்தி. அக் காற்றிடை ஓர்புடை நல் உயிர்ப் பாதம் ஒலிசத்தி (திருமந். 388)

**ஒலிசை** பெ. மணமகனுக்கு மணமகள் சுற்றத்தார் திருமணத்தின் நான்காம் நாளில் கொடுக்கும் வரிசை. (யாழ்.அக.)

**ஒலிசொல்லு-தல்** 5 வி. பயிற்சி செய்தல், முறை சொல்லுதல். *இசையினொடு ஒலிசொலும் அடியவர் (திவ்.பெரி திரு. 8. 7, 10).*

**ஒலிப்பதிவு** பெ. *(தற்காலம்)* இசை, பேச்சு முதலிய நிகழ்ச்சிகளைக் கருவிகள் கொண்டு இசைத்தட்டு போன்றவற்றில் செய்யும் பதிவு. *நிகழ்ச்சி ஒலிப்பதிவு செய்யப்பட்டது.*

**ஒலிப்பு** பெ. *1.* உரப்பொலி. *சொன் மறை ஒலிப்புடை முனி (இரகு. இரகுவுற். 30); 2.* சீறும் ஒலி. *பைவிரி நாகத்து ஐவாய் பிறந்த ஒலிப்பு (பெருங். 1, 56, 274).*

**ஒலிப்பொலி** பெ. *(மொழியியல்)* குரல் நாண் அதிர்வுற ஒலிக்கும் ஒலி. *'B' என்பது ஒலிப் பொலி.*

**ஒலிபரப்பு-தல்** 5. வி. *(தற்காலம்)* வானொலியில் நிகழ்ச்சிகளை ஒலி அலைவரிசை யில் பரவச்செய்தல்.

**ஒலிபெருக்கி** பெ. *(தற்காலம்)* ஒலியைப் பெற்று அதனைப் பன்மடங்கு பெருக்கித் தொலையில் இருப்போரும் கேட்க உதவும் (மின் பொறிக்) கருவி.

**ஒலிமுகம்** பெ. - ஒலிமுகவாயில்

**ஒலிமுகவாசல்** பெ. - ஒலிமுகவாயில்.

**ஒலிமுகவாயில்** பெ. கோட்டை அல்லது கோயிலின் முன்புறத்தில் காவலர் இருக்கும் புறவாயில். *(விவிலி. 2. இரா. 7,17).*

**ஒலியந்தாதி** பெ. ஓர் அடிக்குப் பதினாறு அல்லது எட்டுக் கலைகள் தொடுத்துப் பல சந்த வகுப்புக்கள் கொண்டு அந்தாதி முறையில் அமைத்து முப்பது பாடல்களால் இயற்றப்பெறும் ஒரு பிரபந்தம் *(வெண்பா. செய். 13).*

**ஒலியல்**[1] பெ. *1.* தழைத்திருக்கை. *ஒலியற் கண்ணிப் புலிகடிமாஅல் (புறநா. 201); 2,* தளிர், *(புறநா. 202, உரை: ஒலியற் கண்ணி தளிர் மாலை எனினும் அமையும்); 3.* (பூக்களால் தொடுக்கப்பெறும்) மாலை. *(பரிபா. 19); மல்லிகை ஒலியல் சூடினர் (சீவக. 2682); 4.* ஈ ஓட்டும் கருவி. *......சாமரத் தொகுதி பல இரட்ட, வெள் ஒலியல் நிமிர்ந்து வீச (கந்தபு. 1, 20, 32)*

**ஒலியல்**[2] பெ. 1. ஆடை. *(பிங். 3242; நெடுநல், 181, நச்சி. உரை), 2.* தோல். *(பிங். 3242) 3.* தெரு, *(பிங். 640) 4.* ஆறு. *அவ் ஒலியற்கு ஒப்பாகுவதோ உயர் ஆழியதே (கந்தபு 6, 6,6); 5.* நாடு *(ஆ.நி. 148).*

**ஒலியல்**[3] பெ, *1.* நோய். *(அக.நி.) 2.* தீ *(யாழ். அக.)*

**ஒலியல் மாலை** பெ. வளைய மாலை. *தேம்பாய் கண்ணி ஒலியல் மாலையொடு (புறநா. 76,6-7 பழைய உரை: தேன் மிக்க மாலையை வளைய மாலையுடனே......).*

**ஒலியலந்தாதி** *(வெண்பா. செய். 13. உரை) காண்க,* ஒலியந்தாதி.

**ஒலியழுத்தம்** பெ. *(மொழியியல்)* சொல்லின் பொருள் வேறுபாடு தோன்றுமாறு எடுத்து ஒலித்தல்.

**ஒலியன்**[1] பெ. ஆடை. *(கோயிலொ. 88).*

**ஒலியன்**[2] பெ. *(மொழியியல்)* ஒரு மொழி யில் பொருள்வேற்றுமைப்படுத்தும் அடிப்படை ஒலி.

**ஒலியியல்** பெ. (மொழியியல்) ஒரு மொழி யின் ஒலிகளைப் பகுத்து வகைப்படுத்தும் மொழி யியல் ஆய்வு.

**ஒலியூன்று-தல்** 5 வி. *(இலக்கணம்-* சொல்லின் பொருள் வேறுபாடு தோன்ற ஈற்றெழுத்தை அழுத்தி ஒலித்தல். *ஐகார ஈறாய வழி இவ்வைகாரத்து மேல் ஒலியூன்றியும் (தொல். எழுத். இளம்பூ. 373).*

**ஒலியெழுத்து** பெ. *(இலக்கணம்)* ஒலி உருவான எழுத்து. *இசைப்படு புள்ளின் எழாஅல் போலச் செவிப்புலன் ஆவது ஒலியெழுத்தாகும் (யாப். வி. ஒழி. நூற். 96. உரை. பக். 577)*

**ஒலியேறு** பெ. பேரொலி. *இராமன்... சிலைகொள் நாண்நெடிய கோதை ஒலியேறு (கம்பரா. 3, 1, 34)*

**ஒலியேறு-தல்** 5வி. அழுத்தி ஒலித்துப் பொருள் உடையதாக்குதல். *ஒலியேறின் பயன் உண்டாம் (பிரபந். 429).*

**ஒலியொலியென்றுஒலி-த்தல்** 11 வி. (மரம் மழை முதலியன) மிகுந்த பயன்தருதல். *(வட். வழ.)*

**ஒலியொளிக் காட்சி** பெ. *(தற்காலம்)* மின்ஒளி விளக்குக்களாலும் தக்க விளக்கங்களாலும் நிகழ்த்தப்பெறும் காட்சிகள்.

(சென்னைத் தமிழ்ப் பேரகராதி, தொகுதி 2, பக். 643-644, ஒப்பிடுக, கஞ்சி முதல் கஞல் (லு)-தல் வரை.)

**கஞ்சி**[1] பெ. *1.* நோயாளி குடிப்பதற்காக அரிசிக்குறுநொய் கொண்டு சமைக்கப்படும் நீர் வடிவ உணவு, அன்னப்பால். *வாயில் அட்டிய*

கஞ்சியும் மீண்டே அடைவழி வார (திவ். பெரியாழ். 4, 5, 5); 2. அரிசி, சோளம் முதலிய வற்றின் குறுநொய்யும் மாவும் கொண்டு சமைத்த குழைவாக உள்ள கூழ்; 3. பொது வகையில் உணவு. சாதலைக் காணவும் பட்டது கஞ்சி யோடு அல்லதை (நீல. 374); 4. சோறு வெந்த பிறகு வடிக்கப்படும் நீர்ப் பகுதி. 5. வண்ணார் வெளுத்த துணிகளுக்கு இடும் கஞ்சிப்பசை. கஞ்சி தேய்ப்புண்டு அகில் கமழும் பூந் துகில் (கந்தபு. நாட்டு. 50)

**கஞ்சி²** பெ. 1. காஞ்சிபுரம் என்ற நகரம். கஞ்சிகுடி (—கஞ்சி குடி, காஞ்சிக் குடியிருப்பு) (தனிப்பாடல் 1, 39, 76).

**கஞ்சிக்காடி** பெ. கஞ்சியைப் புளிக்க வைத்து உண்டு பண்ணிய காடி.

**கஞ்சிக்கூடை** பெ. கஞ்சி வடிக்க உதவும் கூடை.

**கஞ்சிகாட்டு-தல்** 5 வி. மிகுதியும் துன்பப்படுத்துதல். (பே. வ.)

**கஞ்சிகாய்ச்சு-தல்** 5 வி. 1. கஞ்சி வைத்தல்; 2. உணவு ஆக்குதல்; 3. அலைக் கழித்தல், படாதபாடு படுத்துதல் (பே. வ.)

**கஞ்சிகை¹** பெ. 1. குதிரை பூட்டிய தேர் (பிங். 1489); 2. சிவிகை, பல்லக்கு. (சூடா. செயற்கை. 47); 3. இரத்தினக்கால் பள்ளி (நாநார்த்த. 171).

**கஞ்சிகை²** பெ. 1. ஆடை. (சூடா, ஞகரவெதுகை 5); 2. கயிற்றால் உருவி விலக்கும் உருவு திரை. கஞ்சிகை வையம் (சீவக. 858).

**கஞ்சிகைக்கொளு** பெ. உருவு திரையை மாட்டும் கொக்கி. கஞ்சிகைக் கொளு வொடு கயிற்றுநிலை அமைத்து (பெருங். 1, 58, 52).

**கஞ்சிகையாள்** பெ. பல்லக்குச் சுமப் போன். கஞ்சிகையாளாக வந்து நின்றான் (ஆசியசோதி).

**கஞ்சித்தண்ணீர்** பெ. 1. வெந்த சோற றில் வடித்த கஞ்சி; 2. எளிய மக்கள் உண்ணும் நீர் வடிவில் உள்ள எல்லா வகை உணவுக்கும் பொதுப்பெயர். (பே. வ.)

**கஞ்சித்தண்ணீர் குடி-த்தல்** 11 வி. சில வகுப்பினர் மேற்கொள்ளும் சாவு வீட்டுச் சடங்கு (யாழ். அக).

**கஞ்சித்தெளிவு** பெ. வெந்த சோற்றி லிருந்து நோயாளியின் பத்தியத்திற்காக இறுத்துத் தரும் கஞ்சி (பே. வ.)

**கஞ்சித்தொட்டி** பெ. பஞ்சகாலத்தில் மக்களுக்குக் கஞ்சி உணவைத் தருமமாக வழங்கு மிடம். (பே. வ.)

**கஞ்சித்தொந்தி** பெ. செல்வ வளத்தால் உணவு உண்டு பெருத்த வயிறு. கள்ளுத் தொந்தியா கஞ்சித் தொந்தியா? (பழ)

**கஞ்சிநீறு** பெ. சிப்பிச்சுண்ணம். (இராம. வை. சி. பக். 40).

**கஞ்சிப்பசை** பெ. துணி நெய்வார் பாவுக்கு இடும் பசை; கஞ்சிப் பற்று. (பே. வ.)

**கஞ்சிப்புனர்ப்பாகம்** வெந்த சோற்றை இரண்டாம் முறை குழைய வேக வைத் தெடுத்த நீர்வடிவ உணவு. (குணபா. 1, ப.432).

**கஞ்சிப்பொழுது** பெ. கஞ்சி அல்லது அது போன்ற எளிய உணவை மக்கள் உண்ணும் பகல் நேரமாகிய உச்சிவேளை. (பே. வ)

**கஞ்சிப்போதுடையார்** பெ. கஞ்சி உண்பவர்களாகிய புத்தர். கஞ்சிப்போதுடையார் கட்டுரை விட்டு (திருமுறை. 3, 115, 19).

**கஞ்சிபோடு-தல்** 6 வி. 1. துணி வெளுப்போர் வெளுத்த துணிக்குக் கஞ்சிப்பசை சேர்த்தல்; 2. துணி நெய்பவர் பாவுக்குக் கஞ்சிப் பசை சேர்த்தல்.

**கஞ்சிமாரியாயி** பெ. குழந்தைகள் உடலில் கஞ்சித்துளி போன்று தோன்றும் அம்மை நோய். (பே. வ.)

**கஞ்சியன்னம்** பெ. வடித்த கஞ்சியும் சோறும் கலந்த பத்திய உணவு. (குண. 1, 481).

**கஞ்சியிடு-தல்** 6 வி துணி நெய்பவர் பாவுக்குக் கஞ்சிபோடுதல்.

**கஞ்சியில் வடி-த்தல்** 11 வி. 1. கஞ்சி வடித்து அதில் சோற்றுப் பருக்கை எடுப்பது போன்று மிகுந்த கருமித்தனமாய் இருத்தல். (பே.வ.); 2. அற்பமானதைப் பெரிதாக்கிப் பேசுதல். (தெ. ஆ. வ.).

**கஞ்சியுப்பு** பெ. உணவில் சேர்க்கும் உப்பு (வைத்தி. அ.).

**கஞ்சியூணர்** பெ. கஞ்சியே உண்பவர் களாகிய புத்தர். மண்டை கையேந்தி மனங்கொள் கஞ்சியூணரும் (திருமுறை. 3, 100, 10).

**கஞ்சிரா** பெ. ஒரு கையில் பற்றி மற்றொரு கை விரல்களால் வாசிக்கின்ற சிறு கைப்பறை யாகிய இசைக்கருவி.

**கஞ்சிலி** = கஞ்சிரா (செ. ப. பே.)

**கஞ்சிலிகை** பெ. இரவிக்கை. (கதிரை. அ.)

**கஞ்சிவடிச்சான்** பெ. கும்பாதிரி என்னும் அரக்குத் தரும் மரம். (செ. ப. பே. அனுபந்தம்)

**கஞ்சீயம்** பெ. 1. வெண்கலம். (கதிரை. அ.); 2. பாத்திரம் (சங். அ.).

**கஞ்சிவார்-த்தல்** 11 வி. 1. எளிய மக்களுக்குத் துன்ப நேரத்தில் கஞ்சி அளித்தல்; 2. கோயில் விழாக் காலத்தில் வேண்டுதலுக்காகக் கஞ்சி சமைத்து உணவாக அளித்தல்; 3. மாரியம்மன் கோயிலில் குறித்த தினத்தில் வழி பாட்டின் பின் நடைபெறும் சடங்கு. 4. காப்பாற்று தல். *அந்தப் பிரபு தான் இவருக்கு இப்போது கஞ்சி வார்த்து வருகிறார்.* (பே.வ)

**கஞ்சு** பெ. கஞ்சன் (கம்சன்). *முன் கஞ்சைக் கடந்தானை* (திவ் மூன்றாம். 34).

**கஞ்சுகசரீரம்.** பெ காலம், நியதி, கலை, வித்தை, அராகம் முதலிய ஐந்து தத்துவங்களா லான உடல். *மாயா தத்துவத்தினின்றும் தோன்றும் கலாதிகளாலாகிய கஞ்சுக சரீரத்தைப் பொருந்தி* (சி.சி. 4,21, சிவஞான. உரை).

**கஞ்சுகம்**[1] பெ. 1. சட்டை. *கஞ்சுக முதல்வர்* (சிலப். 26,138); 2. தத்துவப் போர்வை. *இடையிடையே கூடுதலும் நீங்குதலுமின்றி எக்காலத்தும் ஆன்மாவினுடனாய்க் கஞ்சுகம் போலப் பந்தித்து நிற்றலின்* (சிவஞான. பாடியம்-சூ.2, அதி 2, உரை); 3. மார்புச்சட்டை; 4. பாம்புச் சட்டை. (நாநார்த்த. 17); 5. கவசம். (நாநார்த்த 173)

**கஞ்சுகம்**[2] பெ. காவல் முதலிய பணி களுக்குப் பயிற்றும் பள்ளி, பணிக்காரப்பள்ளி (அக.நிக.2.பக்.30).

**கஞ்சுகம்**[3] பெ 1. அதிமதுரம் *கஞ்சுகம் வாய்த்த கவளந்தன் கைக்கொண்ட குஞ்சரம்* (பு,வெ.350); 2. சிலந்திக் கோரை (மூ.அ.); 3. பலாசம் (-புனமுருககு) (மூ-அ.); 4. முருங்கை (த.சி.வை.அ.பக்.50)

**கஞ்சுகன்** பெ. 1. சட்டை அணிந்தவன். *முற்றும் மூடிய கஞ்சுகன்* (கம்பரா. 6,8,53); 2. சட்டையிட்ட பிரதானி, காவலற் றொழுது *கஞ்சுகன் உரைப்போன்* (மணி.25,11); 3. வைரவர். *கரிய கஞ்சுகன் கழலிணை கருதுவாம்* (தக்கயாகப்.கட. வாழ்த்து).

**கஞ்சுகி**[1] மெய்க்காப்பாளன். *கஞ்சுகி அயல் நின்றானை ஈண்டு நம் தூதர் தம்மை இவ்வழித் தருதிர் என்றான்* (கம்பரா. 6.15,6); 2. காவற் காரன். *கஞ்சுகி அவர்கள் மெய்காவல் ஒன்றினார்* (சூளா. 92); 3. அந்தப்புரக் காவலன். (சங்.அ.); 4. கவசம் தரித்தவன் *செம்மணியின் கற்றைச் சுடர்விட்ட கஞ்சுகியான்* (கம்பரா. ஆ. 83); 5. பாம்பு *உரத்த கஞ்சுகி மூடி நெறுநெறு என* (திருப்புகழ்.5). 6. விடன் (நாநார்த்த. 172); 7. அகில். (நாநார்த்த. 172).

**கஞ்சுகி**[2] பெ. 1. சட்டை; 2. திரைச்சீலை.

**கஞ்சுளி** பெ. 1. சட்டை (திவா. செயற்கை வடிவப்பெயர்) 2. பரதேசியின் பொக்கணம் (வின்.)

**கஞ்சுளிகை.** பெ. இரவிக்கை. (சங்.அ.)

**கஞ்சுளியன்** பெ. அங்காளம்மையைப் பூசிப்பவன். (செ.மா.கை.)

**கஞ்சூழ்** பெ. பேரீந்து. (பச்.மூ.)

**கஞ்சை** பெ. 1. கஞ்சத்தில் (-தாமரை யில்) இருப்பவளாகிய இலக்குமி; 2. இரத்தினம் விளையும் பூமி; 3, கள் விற்கும் வீடு (நாநார்த்த 174).

**கஞல்(லு)-தல்** 3.வி. 1. நெருங்கியிருத் தல். *புதுமலர் கஞல* (புறநா.147); 2. செறிக்கப் பெறுதல். *துவரப் புலர்ந்து தூமலர் கஞலி* (அகநா. 141,12); 3. சிறப்புறுதல் (திவா.); 4. விளங்குதல். *நூல் கஞலு மார்பன்* (கம்பரா. 2,3,96); 5. மிகுதியாதல். *கொழுந்தொளி கஞலத் தூக்கி* (கம்பரா. 6,1206); 6. நிறைதல். *துகளும் மண்ணும் கஞலிய கூடத்து* (யசோ.111); 7. எழுதல் (பிங்.3264); 8. சினங்கொள்ளுதல் (திவா.); 9. ஒலித்தல். *தண்டையாயிரங்கோடி கள் ஒலியுறக் கஞல* (கம்பரா. 6, 4065).

**கஞலம்** பெ. தண்ணீர். (அக.நி-2,ப.30).

## இங்குக் காட்டப்பெற்ற சுருக்கக் குறியீடுகளின் விளக்கம்

| சுருக்கக் குறியீடு | நூல் | பதிப்பு, ஆண்டு |
|---|---|---|
| அகநா. | அகநானூறு (விளக்க உரையுடன் -இரு தொகுதிகள்) | தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1983. |
| அக.நி. | அகராதி நிகண்டு | செந்தமிழ்ப் பிரசுரம், மதுரைத் தமிழ்ச் சங்கம், 1921. |
| அக. நி.[2] | அகராதி நிகண்டு-2. | உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம், திருவான்மியூர், சென்னை, 1983. |
| அரிச். புரா. | அரிச்சந்திர புராணம் | வித்தியா ரத்தினாகர அச்சுக்கூடம், சென்னை, 1913. |
| அருட்பா. | திருவருட்பா | கோல்டன் அச்சியந்திர சாலை, சென்னை, 1906. |
| ஆசியஜோதி | ஆசியஜோதி | பாரி நிலையம், சென்னை, பாதின்மூன்றாம் பதிப்பு, 1983. |
| ஆ. நி. | ஆசிரிய நிகண்டு | தஞ்சை சரசுவதி மகால் வெளியீடு, தஞ்சாவூர், 1975. |
| இரகு. | இரகுவமிசம் | வித்தியானுபாலன யந்திர சாலை, யாழ்ப்பாணம், 1887. |
| உபதேச. | உபதேச காண்டம் | கலாரத்தினாகர அச்சுக்கூடம், சென்னை, 1887. |
| ஐங். | ஐங்குறுநூறு | உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம், திருவான்மியூர், சென்னை, ஆறாம் பதிப்பு 1980. |
| கண்ணன்.கா | கண்ணன் என் காதலன் (பாரதியார் கவிதைகள்) | வானதி பதிப்பகம், சென்னை, ஐந்தாம் பதிப்பு, 1983. |
| கதிரை. அக. | நா. கதிரைவேற்பிள்ளை அகராதி | Asian Educational Services, New Delhi, Sixth Revised and enlarged Edition, 1981. |
| கந்தபு, | கந்தபுராணம் (மூன்று பகுதிகள்) | காசிமடம். திருப்பனந்தாள், 1952-53. |
| கந்தரந். | கந்தரந்தாதி | சைவசித்தாந்த மகாசமாஜம், சென்னை, 1935. |
| கந்தரலங். | கந்தரலங்காரம் (திருப்புகழ் முதலிய அருணகிரிநாதர் நூல்கள்) | |
| கம்பரா. | கம்பராமாயணம் | கம்பன் கழகம், சென்னை, 1976. |
| கலித். | கலித்தொகை (நச்சினார்க்கினியர் உரையுடன்) | தென்னிந்திய சைவசித்தாந்த நூற் பதிப்புக் கழகம், சென்னை, மூன்றாம் பதிப்பு, 1958, |
| கழ.அக | கழகத் தமிழ் அகராதி | தென்னிந்திய சைவசித்தாந்த நூற் பதிப்புக் கழகம், சென்னை, மூன்றாம் பதிப்பின் மறு பதிப்பு, 1980. |
| காஞ்சிப்பு. | காஞ்சிப் புராணம் | மெய்கண்டார் கழகம், காஞ்சிபுரம், 1937. |
| காதம்பரி. | காதம்பரி (குரு சுப்ரமணிய ஐயர் எழுதிய வசனமும்) | The Wednesday Review Press, 1912. |

| | | |
|---|---|---|
| காரைக். | காரைக்காலம்மையார் மூத்த பதிகம், (பதினோராந் திருமுறை) | குமரகுருபரன் சங்கம், ஸ்ரீவைகுண்டம், 1963. |
| குண. | குணபாடம் மூலிகை வகுப்பு (முதற் பாகம்) | கவர்ன்மெண்ட் பிரஸ், சென்னை, முதற் பதிப்பு, 1936. |
| குமர.பிர. | குமரகுருபர சுவாமிகள் பிரபந்தத் திரட்டு (குறிப்புரையுடன்) | கேசரி அச்சுக்கூடம், சென்னை, 1939. |
| குமார. குற. | குமாரலிங்கர் குறவஞ்சி | உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம், திருவான்மியூர், சென்னை, முதற் பதிப்பு, 1982. |
| குருபரம். | குருபரம்பரைப்ரபாவம் (ஆறாயிரப் படி) | ஸ்ரீநிவாஸம் அச்சகம், திருச்சி, 1968. |
| குலசை. | குலசை உலா | உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம், திருவான்மியூர், சென்னை, முதற் பதிப்பு, 1972. |
| குறள். | திருக்குறள் (பரிமேலழகர் உரையுடன்) | தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, ஒன்பதாம் பதிப்பு, 1953. |
| குறுந். | குறுந்தொகை | கேசரி அச்சுக்கூடம், சென்னை, 1937. |
| கோயிலொ. | கோயிலொழுகு | ஆனந்த முத்திராக்ஷர சாலை, சென்னை, 1909. |
| சங்.அக. | தமிழ்ச் சங்க அகராதி (மூன்று தொகுதிகள்) | மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை, 1910, 1912, 1923. |
| சடகோபரந். | சடகோபரந்தாதி | வை. மு. கோ. பதிப்பு, சென்னை. |
| சது. | சதுரகராதி | பிரின்ஸ் ஆப் வேல்ஸ், அச்சியந்திர சாலை, சென்னை, 1907. |
| சி.சி. | சிவஞான சித்தியார் | சைவசித்தாந்த மகாசமாஜம், சென்னை, 1934. |
| சிதம்பர. | சிதம்பர மும்மணிக்கோவை (குமரகுருபர சுவாமிகள் பிரபந்தத் திரட்டு) | கேசரி அச்சுக்கூடம், சென்னை, 1939. |
| சி.போ.பா. | சிவஞான போத மாபாடியம் | சைவசித்தாந்த மகாசமாஜம், சென்னை, இரண்டாம் பதிப்பு, 1952. |
| சிலப்.<br>சிலப்.அரும்.<br>சிலப்.உரை. | சிலப்பதிகாரம்-அரும்பதவுரை, அடியார்க்கு நல்லார் உரை | கேசரி அச்சுக்கூடம், சென்னை, மூன்றாம் பதிப்பு, 1927. |
| சிவஞான. | சிவஞான போதம் | சைவசித்தாந்த மகாசமாஜம், சென்னை, 1934. |
| சிவதரு. | சிவதருமோத்தரம் (உரையுடன்) | முத்தமிழாகர அச்சுக்கூடம், சென்னை, 1867 |
| சிவரக. | சிவரகசியம் | சுப்பராய கவுண்டர் அச்சு இயந்திர சாலை திருச்செங்கோடு, ஜெய ஆண்டு. |
| சிறுபாண். | சிறுபாணாற்றுப்படை (பத்துப்பாட்டு-நச்சினார்க்கினியர் உரையுடனும், உ.வே. சாமிநாதையர் குறிப்புரையுடனும்) | கேசரி அச்சுக்கூடம், சென்னை, மூன்றாம் பதிப்பு, 1931. |
| சீவக. | சீவக சிந்தாமணி (நச்சினார்க்கினியர் உரையுடன்) | உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம், திருவான்மியூர், சென்னை, ஏழாம்பதிப்பு, 1960. |
| சீறாப்பு. | சீறாப்புராணம் | |
| சூடா. | சூடாமணி நிகண்டு (உரையுடன்) | வித்தியா ரத்னாகர அச்சுக்கூடம், சென்னை, 1935. |
| சூதசங்கிதை | சூதசங்கிதை | ரிப்பன் அச்சு இயந்திர சாலை, சென்னை, இரண்டாம் பதிப்பு, மன்மத ஆண்டு. |

| | | |
|---|---|---|
| சூளா. | சூளாமணி | உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம், திருவான்மியூர், சென்னை, இரண்டாம் பதிப்பு, 1962. |
| சேதுபு. | சேதுபுராணம் | வித்தியானுபாலன யந்திரசாலை, சென்னை, இரண்டாம் பதிப்பு, சர்வாரி ஆண்டு. |
| சேர. ஞான. | சேரமான் பெருமாள் நாயனாரின் திருக்கைலாயஞான உலா (பதினோராந் திருமுறை) | குமரகுருபரன் சங்கம், ஸ்ரீவைகுண்டம், 1963. |
| சேர.பொன். | சேரமான் பெருமாள் நாயனாரின் பொன்வண்ணத்தந்தாதி (பதினோராந் திருமுறை) | ,, ,, |
| சைவச. | சைவசமய நெறி | வித்தியானுபாலன யந்திரசாலை, சென்னை, ஐந்தாம் பதிப்பு, கீலக ஆண்டு. |
| ஞானா, | ஞானாமிர்தம் (பழைய உரையுடன்) | அண்ணாமலைப் பல்கலைக் கழகம், 1954. |
| ஞானாதிக்க | ஞானாதிக்கராயக் காப்பியம் | புதுவைப் பதிப்பு, புதுவை. |
| தக்கயாக. | தக்கயாகப் பரணி (மூலமும் உரையும்) | கபீர் அச்சுக்கூடம், சென்னை. இரண்டாம் பதிப்பு, 1945, |
| த.சி.வை.அ. | தமிழ்ச் சித்த வைத்திய அகராதி | |
| தண்டி. | தண்டியலங்காரம் (உரையுடன்) | தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, முதற் பதிப்பின் மறு பதிப்பு, 1983. |
| தமிழ் உரி.பனு. | தமிழ் உரிச்சொற் பனுவல் | செந்தமிழ் நிலைய வெளியீடு, நாகர்கோயில், முதற்பதிப்பு, 1984. |
| திருக்கோ. | திருக்கோவையார் (எட்டாம் திருமுறை, குறிப்புரையுடன்) | தருமையாதீன வெளியீடு, தருமபுரம், 1966. |
| திருச்செந். நிரோட்டக. | திருச்செந்தில் நிரோட்டக யமக அந்தாதி | திருச்செந்தூர் ஆறுமுக சுவாமி தேவஸ்தான வெளியீடு, திருச்செந்தூர், 1959, |
| திருநெடுந். | திருநெடுந்தாண்டகம் (பெரிய திருமொழி) | ராஜம் பதிப்பு. சென்னை, முதற்பதிப்பு, 1956. |
| திருப். | திருப்பாவை (முதலாயிரம்) | ராஜம் பதிப்பு, சென்னை, முதற்பதிப்பு 1955 |
| திருப்பு. | திருப்புகழ் (திருப்புகழ் முதலிய அருணகிரிநாதர் நூல்கள்) | சைவசித்தாந்த மகாசமாஜம், சென்னை, 1935. |
| திருமந். | திருமந்திரம் (மூன்று தொகுதிகள்) | ஜோதி பிரிண்டர்ஸ், திருச்சி, 1972. |
| திருமுரு. | திருமுருகாற்றுப்படை (பத்துப்பாட்டு-நச்சினார்க்கினியர் உரையுடனும், உ.வே. சாமிநாதையர் குறிப்புரையுடனும்) | கேசரி அச்சுக்கூடம், சென்னை, மூன்றாம் பதிப்பு, 1931. |
| திருமுறை-3. | திருமுறை-3. (குறிப்புரையுடன்) (சம்பந்தர் தேவாரம்) | தருமபுர ஆதீனம், தருமபுரம், 1955. |
| திருமுறை, 4, 5, 6, | திருமுறை, 4, 5, 6. (நாவுக்கரசர் தேவாரம்) | சைவசித்தாந்த மகாசமாஜம், சென்னை, 1941. |
| திருமுறை, 7. | திருமுறை, 7. (சுந்தரர் தேவாரம்) | குமரகுருபரன் சங்கம், ஸ்ரீவைகுண்டம், 1978. |
| திருமுறை, 11. | திருமுறை, 11. (பதினோராந் திருமுறை) | குமரகுருபரன் சங்கம், ஸ்ரீவைகுண்டம், 1963. |
| திருவகுப்பு | திருவகுப்பு (திருப்புகழ் முதலிய அருணகிரிநாதர் நூல்கள்) | சைவ சித்தாந்த மகாசமாஜம், சென்னை, 1935. |
| திருவாச. | திருவாசகம் (குறிப்புரைகளுடன்) | ஞானசம்பந்தம் பதிப்பகம், தருமபுரம், 1949. |
| திருவாய். | திருவாய்மொழி | ராஜம் பதிப்பு, சென்னை, முதற்பதிப்பு, 1956. |

| | | |
|---|---|---|
| தில்லைக் கலம்பகம் | தில்லைக்கலம்பகம் (இரட்டையர் பிரபந்தங்கள்) | திருவாவடுதுறை ஆதீனம், திருவாவடுதுறை, 1953. |
| திவ், | நாலாயிர திவ்வியப் பிரபந்தம் (நான்கு தொகுதிகள்) | ராஜம் பதிப்பு, சென்னை, முதற்பதிப்பு, 1955-56. |
| திவா. | திவாகரம் | மனோன்மணி விலாச அச்சுக்கூடம், சென்னை, 1917. |
| தென்.கல். | தென்னிந்தியக் கல்வெட்டுக்கள் | |
| தைலவ. | தைல வருக்கச் சுருக்கம் | எம்பிரல் ஆப் இண்டியா அச்சுக்கூடம், சென்னை, ஹேவிளம்பி ஆண்டு. |
| தொல். | தொல்காப்பிய மூலம் | சிதம்பர முதலியார் அன் கோ, மதுரை, 1922. |
| தொல்.எழுத்.இளம்பூ. | தொல்காப்பியம்-எழுத்ததிகாரம் இளம் பூரணம் | தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, முதற் பதிப்பின் மறு பதிப்பு, 1981. |
| தொல்.பொ. | தொல்காப்பியம்-பொருளதிகாரம். (அகத்திணை, புறத்திணை, களவு, கற்பு, பொருள்-நச்சினார்க்கினியர் உரை) | தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1983. |
| தொல்.பொ.செய். | தொல்காப்பியம்-பொருளதிகாரம்-செய்யுளியல்-நச்சினார்க்கினியர் உரை. | தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, முதற்பதிப்பு, 1965. |
| நந்தி. | நந்திக்கலம்பகம் (விளக்க உரையுடன்) | பாரி நிலையம், சென்னை, நான்காம் பதிப்பு, 1977. |
| நம்.ஆள். | நம்பியாண்டார் நம்பி ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி (பதினோராந் திருமுறை) | குமரகுருபரன் சங்கம், ஸ்ரீவைகுண்டம், 1963. |
| நம்பி.திருவிளை. | திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம் | கேசரி அச்சுக்கூடம், சென்னை, இரண்டாம் பதிப்பு, 1927. |
| நற். | நற்றிணை | ராஜம் பதிப்பு, சென்னை, முதற்பதிப்பு, 1957. |
| நன்.சங். | நன்னூல் சங்கரநமசிவாயர் உரை. (நன்னூல் மூலமும் சங்கர நமசிவாயர் உரையும்-உ.வே. சாமிநாதையர் குறிப்புரையுடன்) | லாஜர்னல் அச்சுக்கூடம், சென்னை, இரண்டாம் பதிப்பு, 1935. |
| நாநார்த்த. | நாநார்த்த தீபிகை | சென்னை சர்வகலாசாலை, சென்னை, 1936. |
| நாலடி. | நாலடியார் | கலாரத்தினாகர அச்சுக்கூடம், சென்னை, இரண்டாம் பதிப்பு, 1904. |
| நீல. | நீலகேசி | தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, முதற்பதிப்பு, 1973. |
| நூற்.திருப். | நூற்றெட்டுத் திருப்பதியந்தாதி (அஷ்டப்பிரபந்தம்) | வை. மு. கோ. பதிப்பு, சென்னை. |
| நெடுநல். | நெடுநல்வாடை (பத்துப்பாட்டு-நச்சினார்க்கினியர் உரையுடனும், உ.வே. சாமிநாதையர் குறிப்புரையுடனும்) | கேசரி அச்சுக்கூடம், சென்னை, மூன்றாம் பதிப்பு, 1931. |
| நைடதம் | நைடதம் | வித்தியா ரத்தனாகர அச்சுக்கூடம், சென்னை, 1910. |
| பச்.மூ. | பச்சிலை மூலிகை அகராதி | |

| | | |
|---|---|---|
| பஞ்சமரபு | பஞ்சமரபு | சக்தி அறநிலையம் வெளியீடு, கோவை, இரண்டாம் பதிப்பு, 1975. |
| பட்டினப். | பட்டினப்பாலை (பத்துப்பாட்டு-நச்சினார்க்கினியர் உரையுடனும், உ.வே. சாமிநாதையர் குறிப்புரையுடனும்) | கேசரி அச்சுக்கூடம், சென்னை, மூன்றாம் பதிப்பு, 1931. |
| பதிற்றுப். | பதிற்றுப்பத்து (பழைய உரையுடன், உ.வே. சாமிநாதையர் குறிப்புரைகளுடன்) | லிபரேட்டர் அச்சுக்கூடம், சென்னை, ஐந்தாம் பதிப்பு, 1949. |
| பரிபா. | பரிபாடல் (பரிமேலழகர் உரையுடன்) | உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம், திருவான்மியூர், சென்னை, ஐந்தாம்பதிப்பு, 1980 |
| பவா.அ. | பவானந்தம் பிள்ளை தற்காலத் தமிழ்ச் சொல்லகராதி | மாக்மில்லன் அண்டு கம்பெனி, சென்னை, 1925. |
| பழ.நா. | பழமொழி நானூறு | Diocesan Press, Madras, 1929. |
| பழமலை. | பழமலையந்தாதி (சிவப்பிரகாசர் பிரபந்தத் திரட்டு) | தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை. |
| பாரத. | வில்லிபுத்தூரார் பாரதம் | எஸ். ராஜம் பதிப்பு, சென்னை. |
| பாரதி. | பாரதியார் கவிதைகள் | வானதி பதிப்பகம், சென்னை, ஐந்தாம் பதிப்பு, 1983. |
| பிங். | பிங்கலந்தை | தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, இரண்டாம் பதிப்பு, 1978. |
| பிரபந். | பிரபந்தத்திரட்டு | உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், அடையாறு, சென்னை, முதல் பதிப்பு, 1980. |
| பு.வெ. | புறப்பொருள் வெண்பா மாலை(சாமுண்டி தேவநாயகர் உரையுடன்) | கபீர் அச்சுக்கூடம், சென்னை, எட்டாம் பதிப்பு, 1953. |
| புறநா. | புறநானூறு (பழைய உரையுடன்) | லாஜர்னல் அச்சுக்கூடம், சென்னை, 1935. |
| பெரியதிரு. | பெரியதிருமொழி | ராஜம் பதிப்பு, சென்னை, முதற்பதிப்பு, 1956. |
| பெரியபு. | பெரிய புராணம் | சைவசித்தாந்த மகாசமாஜம், சென்னை, மூன்றாம் பதிப்பு, 1950. |
| பெரியாழ். | பெரியாழ்வார் திருமொழி (முதலாயிரம்) | ராஜம் பதிப்பு, சென்னை, முதற்பதிப்பு, 1955. |
| பெருங். | பெருங்கதை (குறிப்புரையுடன்) | கேசரி அச்சுக்கூடம், சென்னை, இரண்டாம் பதிப்பு, 1935. |
| பெரும்பாண். | பெரும்பாணாற்றுப்படை (பத்துப்பாட்டு-நச்சினார்க்கினியர் உரையுடனும், உ.வே. சாமிநாதையர் குறிப்புரையுடனும்) | கேசரி அச்சுக்கூடம், சென்னை, மூன்றாம் பதிப்பு, 1931. |
| பொதி.நி. | பொதிகை நிகண்டு | பி. என். பிரஸ், சென்னை, 1934. |
| மணி. | மணிமேகலை (குறிப்புரையுடன்) | கேசரி அச்சுக்கூடம், சென்னை, 1931. |
| மதுரைக். | மதுரைக்காஞ்சி (பத்துப்பாட்டு-நச்சினார்க்கினியர் உரையுடனும், உ.வே. சாமிநாதையர் குறிப்புரையுடனும்) | கேசரி அச்சுக்கூடம், சென்னை, மூன்றாம் பதிப்பு, 1931. |
| மலை. | வைத்தியமலையகராதி | ஸ்ரீ பத்மநாப விலாச அச்சுக்கூடம், சென்னை, 1908. |

| | | |
|---|---|---|
| மலைபடு. | மலைபடுகடாம் (பத்துப்பாட்டு-நச்சினார்க்கினியர் உரையுடனும், உ.வே. சாமிநாதையர் குறிப்புரையுடனும்) | கேசரி அச்சுக்கூடம், சென்னை, மூன்றாம் பதிப்பு, 1931. |
| மஸ்தான்.நான். | மஸ்தான் சாகிபு நான்மணி மாலை | செய்குத்தம்பிப் பாவலர் பதிப்பு, 1948. |
| முத்துக். | முத்துக்குமாரசாமிப் பிள்ளைத் தமிழ் (குமரகுருபரசுவாமிகள் பிரபந்தத் திரட்டு-குறிப்புரையுடன்) | கேசரி அச்சுக்கூடம், சென்னை, 1939. |
| முல்லைப். | முல்லைப்பாட்டு (பத்துப்பாட்டு-நச்சினார்க்கினியர் உரையுடனும், உ.வே. சாமிநாதையர் குறிப்புரையுடனும்) | கேசரி அச்சுக்கூடம். சென்னை, மூன்றாம் பதிப்பு, 1931. |
| மூ.அ. | மூலிகை அகராதி (வைத்திய மூலிகை விரிவகராதி) | வித்தியா ரத்தினாகர அச்சுக்கூடம், சென்னை, 1902. |
| மூவரை.விறலி. | மூவரையன் விறலி விடுதூது | உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம், திருவான்மியூர், சென்னை, 1982. |
| மூன்றாம். | மூன்றாம் திருவந்தாதி (இயற்பா) | ராஜம் பதிப்பு, சென்னை, முதற்பதிப்பு, 1956. |
| யசோ. | யசோதரகாவியம் | தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, முதற்பதிப்பின் மறு பதிப்பு, 1982. |
| யாப்.வி. | யாப்பருங்கலவிருத்தி (யாப்பருங்கலவிருத்தி உரை) | தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, முதற் பதிப்பின் மறு பதிப்பு, 1976. |
| யாழ்.அக. | யாழ்ப்பாண அகராதி | யாழ்ப்பாணத்து மானிப்பாய் அமெரிக்கானு மிசியோன் அச்சுக்கூடம், 1842. |
| வட.நி. | வடமலை நிகண்டு | உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம், திருவான்மியூர், சென்னை, 1983. |
| விதான. | விதானமாலை | ரிப்பன் அச்சு இயந்திர சாலை, சென்னை, இரண்டாம் பதிப்பு, 1900. |
| விவிலி. | விவிலிய நூல் | டயோசிசன் பிரஸ், சென்னை, 1923. |
| வின். | வின்சுலோ (தமிழ் ஆங்கில அகராதி) | ஆசியன் எஜுகேஷனல் சர்விசஸ், புது டெல்லி, முதல் பதிப்பின் மறுபதிப்பு, 1984. |
| வெண்பா | வெண்பாப் பாட்டியல் (வெண்பாப் பாட்டியலும் வரையறுத்த பாட்டியலும்) | தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, முதற் பதிப்பின் மறுபதிப்பு, 1976. |

| பிற வகைச் சுருக்கக் குறியீடு | முழுவடிவம் |
|---|---|
| அதி. | அதிகரணம் |
| கொச்.வ. | கொச்சை வழக்கு |
| கோ.வ. | கோயில் வழக்கு |
| சூ. | சூத்திரம் |
| செ.ப.பே. | சென்னைப் பல்கலைக் கழகப் பேரகராதி |
| தற்.வ. | தற்கால வழக்கு |
| பக். | பக்கம் |
| பழ. | பழமொழி |
| பாயி. | பாயிரம் |
| பெ. | பெயர் |
| பே.வ. | பேச்சு வழக்கு |
| வட்.வ. | வட்டார வழக்கு |
| வி. | வினை |
| வி.அ. | வினை அடை |

**பின்குறிப்பு**

கம்பராமாயணத்திலிருந்து காட்டப்பெற்ற மேற்கோள் எண்கள் பின்வரும் முறையில் அமைந்துள்ளன :

1. முதற்காண்டத்திலிருந்து தொடரும் தொடரெண்கள் சென்னைக் கம்பன் கழக வெளியீட்டிலிருந்து எடுக்கப்பட்டவை.
2. காண்டம், படலம், பாட்டெண் எனக் கொடுக்கப்பட்டவை, (யுத்தகாண்டம் தவிர்த்து) அண்ணாமலைப் பல்கலைக்கழக வெளியீடுகளிலிருந்து எடுக்கப் பட்டவை.
3. யுத்தகாண்டத்திற்குக் கொடுக்கப்பட்ட தொடரெண்கள் வை.மு. கோபால கிருஷ்ணமாச்சாரியர் பதிப்பிலிருந்து எடுக்கப்பட்டவை.

தமிழ்ப் பேரகராதி இறுதி வடிவம் பெறுங்கால், ஒரே பதிப்பிலிருந்து எண்கள் கொடுக்கப்படும்.

மாருதி பிரஸ், சென்னை - 600 014